பதிவு எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை {உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா}

# குடி அரசு


| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| |
|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 3. |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 4 | ஈரோடு, விபவ ஞு புரட்டாசி மீ 8 உ. (23—9—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 22



இப்பொழுதுதான் வந்தது!! புதியசரக்குகள்!!

## உறுதியான ஸ்விஸ்ஃடி கறுப்புநூல்

## பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சரசமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 2 இன்சு அகலம் | ரூ. | 0—7—0 | ஓர் அடி. |
| 3 ,, | ,, | 0—10—6 | ,, |
| 4 ,, | ,, | 0—14—0 | ,, |

1/4 இன்சு கனம் உள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 4 இன்சு அகலம் | ரூ. | 1—2—6 | ஓர் அடி. |
| 5 ,, | ,, | 1—7—6 | ,, |
| 6 ,, | ,, | 1—12—0 | ,, |

## 26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள் அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 6 அடி நீளம் | 33 இன்சு அகலம் | ரூ. | 2—4—0 | ஒரு தகடு. |
| 7 ,, | ,, | ,, | 2—8—0 | ,, |
| 8 ,, | ,, | ,, | 3—0—0 | ,, |
| 9 ,, | ,, | ,, | 3—6—0 | ,, |
| 10 ,, | ,, | ,, | 3—12—0 | ,, |

MASSEY & Co. LTD. ENGINEERS

மாஸி அண்டு கம்பெனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0.

தி. கிருஷ்ண ஏஜன்ஸி, தபால் பெட்டி 119 மதராஸ்.

## அனிதா காஸ்பார்ட் வைத்தியசாலை.

ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா
வோகளி ஆரியா
எம் ஏ, பி டி, எம் டி,
சர்ஜன் அண்ட் பிஸிஷன்

கர்ப்ப சம்பந்தமான சகல வியாதிகளையும் நிவர்த்திப்பதிலும், மருத்துவம் செய்வதிலும் கை தேர்ந்தவர்.

குழந்தைகளின் வியாதிகளுக்கு சிறந்த வைத்தியம் செய்யப்படும்.

டாக்டர் பார்க்கும் நேரம்:—
காலை 8 முதல் 11 மணி வரை
மாலை 5 முதல் 6 மணி வரை
டெலிபோன் நெ. 3789.

158, புரசைவாக்கம் ஹைரோட்,
வேப்பேரி, சென்னை.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த வேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஷு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

## 'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,, 18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

## அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார்செய்த அருணாக்கொடி, திலுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு, கடகம், மயிர் மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவிச் சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கப், வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

**S. K. மாணிக்கம் செட்டி,**
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்பேட்டை, சேலம்,

அன்பார்ந்த நண்பர்களே!

மனதிலுள்ள விஷயங்களை இங்கிலீஷில் வாக்கிய ரூபமாய் வெளிப்படுத்திப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சாதகமாய் உபயோகப்படக் கூடியது

"ட்ரான்ஸ்லேஷன் கைட்"

என்னும் புஸ்தகம் ஒன்றுதான். ஏனெனில், இங்கிலீஷ் இலக்கண விதிகளையும் மொழி பெயர்ப்பின் தத்துவங்களையும் விஸ்தாரமாய் எடுத்துக்காட்டி உதாரணங்கள் சகிதம் யாவருக்கும் அனுபோகத்தில் பயன்படும்படிக்கான முறையில் இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. விலை அணா 10. வி. பி. சார்ஜ் அணா 4.

நீலகண்டம் புக் டிப்போ,
கயத்தார் P. O
(திருநெல்வேலி ஜில்லா.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. சு. கோ. இ. சாதர்மீரா சாய்பு, ஹெட்கர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத
'ஆனந்தகுணபோதினி"
ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

## அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக
3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு
பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதினியில் இதுபோன்ற மூதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகையொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகைதமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ, 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
இதை—சாதனை செய்.

## சுவாச காச ரோக நிவாரணி
### என்னும் ஆஸ்த்மா பௌடர் சிகிட்சை.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)

## மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது, உத்திரவாதமுள்ளது.

இரமமாக சாப்பிட்டுவந்தால் துரித ஸகலிதம், சொப்பன ஸ்கலிதம் முதலியன தீரும். நீர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பன சக்தி உண்டாகும்.

120 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2—0—0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆநந்தநிலயம், திருச்செங்கோடு.

# பிராமணனைக் குற்றம் சொல்லுவது ஏன்?

## பிராமணத் தன்மையிலிருந்து நீங்கினதால் மட்டுமன்று.

(முன்தொடர்ச்சி)

கைவல்யசாமியார் எழுதுவது:—

இத்தவியாசத்தின் முன்விஷயங்களை வாசகர்கள் படித்து அறிஞரானாய்விட்டாலும், அதன் விவகாரங்கள் அடிக்கடி வந்து நம்மை துன்புறுத்தி இழிவுபடுத்துவதால், அவை நம்மனதை விட்டு அகலுவதில்லை. பிராமணனென்பது ஜாதியல்லவென்றும், வேதத்தின் ஒரு பகுதியான ப்ரமண்யமென்னும் பாகத்தை அப்பியசித்து அதன் அனுபோகத்தை அடைந்தவனும், ஜாதி, குணம், கிரியைகள் அற்றதாயும் இரண்டற்றதாயும், பசி, தாகம், சோகம், மோகம், கிழத்தனம், மரணம், என்றவைகளற்றதாயும, இருத்தல், உண்டாதல், வளருதல், திரிதல், குறைதல், நசித்தல் என்ற விகாரங்களற்றதாயும், சத்தியக் ஞானாநந்தமடைந்த ஸ்வரூபமாயும், விகல்பமற்றதாயும், மனஸ் சங்கல்பங்கள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும், எல்லாபூதங்களிடத்தும் அந்தர்யாமியாகப் பரவியிருப்பதாயும், உள்ளும் வெளியும் ஆகாசம்போல இடையற்று நிறைந்திருப்பதாயும், அகண்டானந்தஸ்வபாவமாயும், ஒப்புயர்வற்றதாயும், அனுபவித்தே யறியத்தக்கதாயும் உள்ள ஆத்மாவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல நேராக அனுபவிப்பவன் எவனுகவிருந்தபோதிலும், அவனே பிராமணனென்றும், காமக்குரோதலோப மோக மதமாத்சரியங்களற்றவனாய், சமம், தமம், உபரதி, திதி, தீக்ஷை, ஸமாதானம், சிரத்தை என்ற சம்பத்துக்களைப் பூரணமாகவடைந்து, சங்கல்பம், திருஷ்ணை, ஆசை, மோகம் முதலியவைகள் நீங்கப்பெற்றவனாய், அகங்காரம் முற்றிலும் ஒழிந்தமனமுடையவனாய், இருப்பவன் யாரோ அவன்தான் பிராமணன்என்பது வேதங்களின் நிச்சயமென்றும், வேறு எத்திறத்திலும் பிராமண்யம் சித்திக்கவே மாட்டாது என்றம் வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் சச்சிதானந்த ரூபியாயும் அத்வதீயமாயும் இருக்கிற பிர்மத்தை எப்போதும் தியானித்துக் கொண்டிருக்கும் தொழிலைவிட்டு வேறுவிவகாரங்களுக்கு மனம் சென்றுவிட்டால் அவன் பிராமணத்தன்மையிலிருந்து நீங்கினவனுவான் என்பது வேதத்தின் விதியென்று முன்வியாசங்களில் விபரமாக எடுத்துச்சொல்லியிருக்கிறேன். இத்தன்மையிலிருக்கும் பிராமணர்களையும் அதினின்று நீங்கிவிட்டபார்ப்பார்களையும் நாங்கள் குற்றம் சொல்லவில்லை. இவ்வாசனை ஒருசிறிதுமில்லாமல் பிராமணத்தன்மையினின்று அநேகதலைமுறைக்கு முன்னமேயே தள்ளப்பட்டு, ஆட்டின் அண்டத்தை அமுக்கிக்கொல்லும் பார்ப்பானிலிருந்து ஆங்கில ஈாட்டிற்குப்போய் ஆட்டைவிலக்கி மாட்டையே ருசியாகத்தின்னும் பாப்பான்வரையிலும் பிராமணனென்று சொல்லிக்கொண்டு மற்றவர்களைத் தாழ்ந்தவர்களெனநினைத்து "திருப்பதி சம்ஸ்கிருத பாடசாலையில், பிராமணரல்லாதவர்கள் சூத்திரர் ஆனபடியால் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளமாட்டோம், சேர்த்துக்கொண்டவர்க்கும் இலக்கணம் சொல்லிக்கொடுக்க மாட்டோம்" என்கிறார்கள். இதற்காகத்தான் சாஸ்திரத்திலுள்ளதையும், இப்பொழுதுள்ள அறிவின் விரிந்த உலகத்திலுள்ளதையும், தங்களுடைய சுகங்களுக்கு எந்தச்சாஸ்திரமும் பார்ப்பாருக்குத் தடையாக வில்லாதிருப்பதையும், தங்கள் சுயக்கும் லௌகீக உயர்விற்கும் எதைவேண்டுமானாலும் செய்துகொண்டு மற்றவர்களைப் பொய்யட்டின் நயத்தால் கடவுள்பேரால் வஞ்சிப்பதையுமே குற்றமென எடுத்துச்சொல்லுகிறோம். நாங்கள் சொல்லுவது சாஸ்திரத்திற்குச்சம்பந்தமில்லாமலிருந்தாலும் பொது அறிவிற்கு விரோதமாகவிருந்தாலும் எடுத்துக்காட்டலாம். அதை விட்டு விட்டு "பார்ப்பானையே தினமும் திட்டுகிறார்கள்" என்றுசொல்லும் பார்ப்பனனல்லாதவனை, வயிறுவளர்க்கவோ பெருமையை உண்டுபண்ணிக்கொள்ளவோ நினைத்துக்கொண்டு அடிமைப்புத்தியைவிட இஷ்டமில்லாதவனென்றே சொல்ல வேண்டும்.

"என்ன எழுதியும் ஆனகாரியமொன்று மில்லையே. பார்ப்பானில்லாமல் எந்தக்காரியம்தான் நடக்கிறது! அவர்கள் எதில்தான் கலக்காமலிருக்கிறார்கள்! அவர்களைத்தள்ளமுடியுமா?" என்று சொல்லுகிறவர்கள் பார்ப்பார்களாக விருந்தால் அதில் அதிசயம் ஒன்றுமில்லை. மற்றவர்கள் சொல்லுவதுதான் சிறிது வருத்தத்தைக் கொடுக்கிறது. இதில் சிலருக்குப் புத்தியிருந்தும் காரியத்தின் தன்மையை உணருவதில்லை. இதில் இன்னும்சிலர்உயர்ந்தஜாதித் தமிழர்களென்றும், தெய்வபக்தி மிகுந்தவர்களென்றும், ஆசார அனுஷ்டானம்செய்கிறவர்களென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அநேகமாய்ப்படித்தவர்கள். தமிழ் படித்தவர்களென்னும் பேரோடுகூடி பீ. ஏ., எம். ஏ. பாஸ்பண்ணினவர்களு முண்டு. சைவனேயாயினும், தமிழ்வேதம் ஓதத்தெரிந்த ஓதுவானேயாயினும், அதிலும் மேலாக நினைத்துக்கொண்டிருக்கும் தேசிகனேயாயினும், கடவுள் வாயினின்று வந்ததை வருணாசிரமக் கணக்குப்படி பரிசோதித்து சாஸ்திரத்தையும் எடுத்துப்பார்த்துப் பார்ப்பான்போட்ட கட்டளைப்படி இங்கிலீஷ் சட்டத்தையும் பார்த்தால் இவர்கள் எல்லாம் சூத்திரர் சூத்திரர்களே.

சூத்திரன்என்பதின் அர்த்தம் அநேகருக்குத்தெரியாது. தெரிந்திருந்தாலும் உணர்ச்சிவேண்டாமா! சூத்திரன்என்னும் அர்த்தம் தெரிந்தால் சுயமரியாதைச்சங்கத்தை ஏன் குற்றம்சொல்லுகிறான். சூத்திரன் என்னும் அர்த்தம் சிறிது தெரிந்து உணர்ச்சியும் வந்துசிலர் "நாங்களும் சூத்திரர்களா"வென்று பலசமயம் கேட்டதுமுண்டு. உடனே பாப்பார்கள் தந்திரமாய் நீங்கள் சூத்திரர்களல்ல, "சற்சூத்திரர்கள், மற்றவர்கள் அசற்சூத்திரர்கள்" என்று ஏமாற்றி அதற்குத்தகுந்தவாறு பலஏடெழுதிக்காட்டியும் விட்டார்கள்.பார்ப்பான் எந்த ஏடெழுதினாலும் "சிவன் பார்வதிக்குச்சொன்னது, பார்வதி நந்திக்குச்சொன்னது, விஷ்ணு இலட்சுமிக்குச்சொன்னது, இலட்சுமி கருடனுக்குச்சொன்னது, விநாயகர் தன்கொம்பை ஒடித்து எழுதுகையில் தேவேந்திரன் மேகத்தில்மறைந்திருந்து அதைப்படித்து அகஸ்தியருக்குஉபதேசித்தான்" என்றும், இதற்குள் அடங்காவிட்டால் "நாரதர் பூலோகத்து ரிஷிகளுக்கு முன்யுகத்தில் சொன்னார். அவர்சொன்னதைநைமிசாரண்யரிஷிகளுக்கு வேதவியாசர் சொன்னார்" என்றே மூகவுரை எழுதுவது வழக்கமானதாலும், வடமொழிப்பழக்கமில்லாததால், கடவுள்சொன்னார் என்பதற்கு ஏதாவது ஒருகடவுள் பெயர்சொல்லப்பட்டாலே தமிழருக்கு அதற்குமேல் சந்தேகமொன்றுமில்லாததாலும், அவர்கள்சொன்னதை நம்பிக்கொண்டு உணர்ச்சிமழுங்கி தங்களை சற்சூத்திரர்களென்று நினைத்துக்கொண்டார்கள் சிலர். தமிழ், இங்கிலீஷ் படித்து பரீட்சை தேறிப் பல தேசத்து ஜனங்கள், அவர்கள் கதைகள், இப்பொழுதிருக்கும் நாகரீகம், உலகஅறிவு, ஆகிய இத்தனையும் தெரிந்திருப்பவர்களில் ஒருசில மடையர்கள் தங்களைப்பற்றி அறிவுடைய உலகம் என்னநினைக்கிறதென்பதை உணராம லிருக்கிறார்கள்.

சூத்திரன்என்றால் வடமொழி நிகண்டில் "மடமையுடையோன்" "ஏவல் புரிவோன்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது சற் சூத்திரனென்றால் நல்ல மடையன் நல்லவேலைக்காரன் என்பதுதானே அர்த்தம். சூத்திரன் என்னும் நாலாம் வருணத்தவன் யார் என்பதை மனு முதலிய ஸ்மிருதிகளில் "அடிமை,விலைக்குவாங்கப்பட்டவன் பார்ப்பானின்தாசிமகன்" என்றுஎழுதியிருக்கிறது. "எதில் எப்படி எழுதப்பட்டாலும் நாங்கள் ஆசார அனுஷ்டான முடையவர்கள். ஒழுக்கமுடையவர்கள் கடவுள், பக்தியுடையவர்கள்" என்று சொல்லிக்கொண்டாலும் பார்ப்பானுக்கு அடிமைத்தொழில்செய்யும் ஒன்றினாலேயேதான் சூத்திரன் ஒழுக்கமுடையவனாக விருக்கமுடியும். வேறு எவ்விதத்திற்கும் சாஸ்திரம் இடம் கொடுக்கவில்லை. புருஷனைத்தெய்வமாக நினைத்து எப்படி பெண்ஜாதி பணிவிடை செய்து நற்கதி யடைகிறாளோ அதுபோல் பிராமணனை தெய்வமாக நினைத்து அவனுக்கு ஊழியம் செய்தால் அந்தச்சூத்திரனுக்கு நல்லகதியுண்டாகிறது. தில்லைவாழ் அந்தணருக்கு அடியேன் என்று நமதுசிவபெருமானே சொன்னதாக நம்வேதமென்று நம்புலவர்கள் சொல்லும் பெரியபுராணத்திலேயே இருக்கையில் நாம்சூத்திரன் அல்லவென்று சொன்னால் சிவபெருமானின் கோபம் வந்துவிடுமோ என்கிறபயம் போகாதே. பழைய தமிழனிலிருந்து பிரிந்துபோனவன் கோவில் குருக்களென்று சொன்னாலும் தீக்ஷதர்களை எந்தக்கூட்டத்தில் பண்டிதர்கள் சேர்ப்பார்களோ பின்னால் பார்ப்போம், பாரதத்தில் சூத்திரனென்றால் ஒழுக்கமில்லாதவன், ஆசாரமில்லாதவன், கண்டதைப்புசிப்போன் என்றே எழுதியிருக்கிறது.

சிவச்சின்னங்களணித்து சிவபூசைசெய்து பெரிய சைவனென்று நினைத்துக் கொண்டிருப்பவனேயாயினும், ஆயிரத்தைந்நூறு வேலியுடைய அதிகாரச் சைவனேயாயினும், படித்த பண்டிதச் சைவனேயாயினும், குளித்துத் திருநீறுபூசி உத்திராக்ஷமணிந்து துவைத்த வேஷ்டியைத் தூக்கிக் கட்டி ஒடுங்கி ஒதுங்கி குனிந்து யாரையும் தொடாமல் விலகி வாய்பேசாமல் நடந்து சிவதெரிசனத்திற்குச் செல்லுகையில் யாராவது அருகில் வந்துவிட்டால் வாய்க்குவந்தபடிதிட்டி தன்வாழ்வெல்லாம் சிதறிப்போனதாக நினைத்துப் பூசைக்குப்போவதை மறந்து பக்கத்து வேலிக்காரன் மேல் மனதைத்திருப்பிக்கொள்ளும் பக்தர்களேயாயினும் அகச்சான்றும் புறச்சான்றும் அதிலுள்ள ஆசாரச்சான்றும் எங்கள் ஆராய்ச்சிச்சான்றுக்கு ஆளாகி பத்திரிகைச்சான்றுக்கு பக்கபலமாக விருந்தாலும் என்பிழைப்புச்சான்றுக்கு அவை பிழையாயின் நான் என்னசெய்யட்டுமென்று சொல்லுகிறவர்களேயாயினும் சமயம் கிடைக்கையில் ஒவ்வொரு வார்த்தையால் எங்களைக் தூண்டிப்பதுபோல் காட்டி தன் நண்பர்களை சந்தோஷப்படுத்தும் பெரிய தேசிக வாதிகளான சைவர்களேயாயினும் இவர்களையெல்லாம் சிறு பார்ப்பாரப்பையன்கூடசூத்திரன் என்றே சொல்லுகிறான். "நான் சற்சூத்திரன், நான் சூத்திரனல்ல வைசியன், நாங்களெல்லாம் க்ஷத்திரியர்கள்" என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள், நினைத்துக் கொண்டிருப்பவர்களெல்லாம், பாப்பார்சபைதுவார் மகாநாட்டுத்தீர்மானத்தையும், திருவல்லிக்கேணி வருணாசிரம சபைப்பிரசங்கத்தையும் படித்துப்பார்க்கட்டும்.

திருப்பதி சமஸ்கிருத பாடசாலையில் பார்ப்பாரல்லாதவர்களைச் சேர்த்துக்கொள்ள மாட்டோமென்றும் அவர்களுக்கு இலக்கணம் சொல்லி வைக்க

இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

# இதிகாசங்கள்.

## இராமாயணம்
## அயோத்தியாகாண்டம்.
## கட்டுரை 2.

சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.

கேகய நாட்டரசன் வீட்டிலிருந்து கைகேசியுடன் வந்து அவளோடுவெகு காலமாகவாழும் மந்தரையென்னும் வேலைக்காரி தற்செயலாய் மாடியிலேறி அயோத்தியைமுழுவதும் பார்த்தாள். இராமனுக்கு மறுநாள் விடிந்ததும் முடிசூட்டலால் ஊர் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தது. அது கண்ட கூனியாகிய மந்தரை ஆச்சரியமடைந்தாள். உடனே அவள் ஒரு தோழியை நோக்கி "கோசலை பொருளைச் சேர்ப்பதில் ஆசையுடையவளே. அவள் பொருளை மேலும்மேலும் கொடுக்கும்படி உண்டான மகிழ்ச்சிக்குக் காரணமென்னே?" என்றுகேட்டாள். அத்தோழிமறுநாள் நடக்கஇருக்கும் இராமன் முடிசூட்டைஅறிவித்தாள். உடனே மந்தரைக்குச்சினம் மிக மூண்டது. அவள் மாடியிலிருந்து கீழே வந்து தூங்கியிருந்த கைகேசியை எழுப்பி, "அடீ, என்ன தூக்கம்? உனக்குப் பெரிய ஆபத்து வந்து விட்டது. நீ அரசனுக்கு வேண்டியவளென்று புகழ்ந்து கொள்ளுகிறாய். அவனுக்கு உன்னிடத்தில் உண்மையான பிரியமில்லையென்று எனக்கு நன்றாகத்தெரியும்" என்று கூறினாள். கைகேசி "அடீ, உன் முகம் மிகவும் வாடியிருக்கிறதே காரணமென்ன?" என்றாள். மந்தரை கோபம் பொங்கி "தேவி! அரசர் இராமனுக்கு யௌவனராஜ்ய அபிஷேகம் செய்யப்போகிறார். அதனால் உனக்கு பெரிய ஆபத்து வந்து விட்டது. நான் உனக்கு மிகவும் வேண்டியவளல்லவா! அதனால் பெரிய துக்கக் கடலில் மூழ்கி உனக்கு நலஞ் சொல்லவந்தேன். நீ சுகமாக இருந்தாற்றானே நானும் சுகமடைவேன். நீ அரசவமிசத்திற் பிறந்து அரசனுக்கு மகிஷியாகியும் உனக்கு ராஜதந்திரம் தெரியவில்லை. நீயோ நல்ல மனசுள்ளவள். உன் கணவனோ மகாவஞ்சகன், நல்லவனைப்போல பாசாங்கு பண்ணி உனக்குப் பிரியமாகப்பேசினும் மிகவும் தீயநடத்தையுள்ளவன். இப்போது கோசலை மகன் ராமனுக்கு நாட்டைக்கொடுக்கப் போகிறான். வரும் கெடுதியை அறியாத மூட்டாளே! அரசனுடைய கெட்ட எண்ணம் தெரிந்ததா? பரதனை உன் தகப்பன் வீட்டிற்கு அனுப்பிவிட்டான். நாளைக்காலையில் இராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்து விட்டான். அவன் உன் ஜென்மப் பகைவன், பாம்புக்குட்டியின் அழகில் மயங்கியது போல நீ அவன் அழகில் மயங்கினாய். பாம்பையும் பகைவனையும் கவனிக்கவில்லையென்றால் அவை தீங்கு செய்வன போல இன்றைக்கு உனக்கும் உன் மகனுக்கும் தீமை செய்யப்போகிறான். கபடமற்றவளே உனக்கு நன்மை தேடுபவனைப்போலப் பாசாங்குசெய்யும்மகாபாபியான தசரதன் உன்னையும் உன் மகனையும் உன் பந்துக்களையும் நிர்மூலம் செய்வான். இனியாவது மோசம்போகாதே. அவனை வசப்படுத்தும் சக்தி உனக்குண்டல்லவா? அதை உபயோகித்து என்னைக்காப்பாற்று" என்றாள்.

இராமாபிஷேகத்தைக் கேட்ட கைகேசி மிகுந்த மகிழ்ச்சியையடைந்து ஓர் விலையற்ற மணிமாலையை மந்தரைக்குப்பரிசாகக் கொடுத்து "இராமனிடத்திலும் பரதனிடத்திலும் எனக்கு பேதபுத்தியில்லை; எனக்கு இராமன் மூலத்தால் நன்மையே. உனக்கு வேண்டியதைக் கேள்" என்றாள். அதைக்கண்டமந்தரை "அறிவற்றவளே உனக்குப் பேராபத்து விளையும் போது மகிழ்ச்சியடைகிறாய். இராமன் உனக்குச் சக்களத்தி பிள்ளையல்லவா? அவன் உனக்கு எமனல்லவா? இந்த நாடு இராமனுக்கும் பரதனுக்கும் பொதுவல்லவா? ஆதலால் இராமனுக்கு பரதனால் பெரும் பயம் நேரும்; அதனால் இராமன்பரதனுக்கு கேடுசெய்வான். இலக்குமணனுக்கும்சத்துருக்கனுக்கும் இந்நாடு பொதுவானாலும் இலக்குமணன் இராமனிடத்தில் மிகவும் நண்புடையவன். அதனால் இராமனுக்கு அவனிடத்தில் பயமில்லை. அதேபோல் பரதனுக்குச் சத்துருக்கனிடம் பயமில்லை. இராமன் முந்திப்பிறந்தவன். அதனால் அரசாட்சி அவனுக்குமுதலில் கிடைக்கும். பின்வரிசையாகபரத இலக்குவ சத்துருக்கருக்குக்கிடைக்கும். ஆகையால் தனக்கு அடுத்த பாத்தியமுள்ள பரதனை அவன் கொல்லவே முயல்வான் தனக்கு முதலில் அரசாட்சி கிடைக்கும்போது பரதனுக்கு அது கிடைக்குமோ என்ற சந்தேகம் இராமனுக்கு உண்டாக நியாயமில்லையோ வென்றால் இராமன் விவேகி; அரசதந்திரத்தில் நிபுணன், செய்யவேண்டிய காரியத்தைத் தகுந்தகாலத்தில் செய்கிறவன். உன் மகனான பரதன் மேற்சொன்ன குணங்களில்லாதவன். ஆதலால்இராமன் என்ன செய்வானோ என்று நடுங்குகிறேன்.

கோசலை வெகு அதிட்டசாலி; நாளை அவள் மகன் நாடுபெற நீ அவள் வேலைக்காரியைப்போல அவளுக்குப்பணிவிடை செய்வாய். அவளால் உனக்குக் கேடுநேரும். நானும் அவளுக்குப் பணி செய்ய வேண்டும். உன்மகன் இராமனுக்கு அடிமையல்லவா? அதனால் பரதனுடைய மனைவியர் துக்கப்படுவார்கள்; இராமனுடைய மனைவியர் அதிக மகிழ்ச்சியடைவார்கள்" என்று புகன்றாள். இவ்வுரைகளாலும் கலங்காத உத்தமியாகிய கைகேசி "இராமன் நல்லவன், மூத்தமகன். அதனால் இளவரசாகத்தகுந்தவன். இராமன் நூறு ஆண்டுகள் வரை ஆண்டபிறகு முன்னோர்களின் அரசு பரதனுக்குக் கிடைப்பது நிச்சயம். ஆகையால் தனக்குப்பின் அரசனாகும் பரதனுக்கும் இப்பொழுதே இளவரசுப்பட்டம் கட்டுவான். என்னிடத்தில் மிகவும் அன்போடு பணிவிடை செய்கிறான். நூறு ஆண்டுகளின் பின் பரதனுக்கு நாடு கிடையாது போயினும் போகட்டும். இராமனுக்கு வந்த நன்மை பரதனுக்கு வந்தது போலவே. இராமன் தன் உடன் பிறந்தவர்களைத் தன்னைப் போல் எண்ணுகிறான்" என்றாள்.

மந்தரை அடங்காத்துயரம்கொண்டு "அடீ, கெடுதியை நன்மையென்று நினைக்கிறவளே! பரதனுக்கு நியாயமாய் கிடைக்கவேண்டிய அரசாட்சி கிடைக்காமலிருப்பதும் அவன் நாட்டிலிருந்து தூரத்தப்படுவதுமாகிய பெரிய ஆபத்தில் மூழ்கியிருப்பதை நீ அறியவில்லை. நூறு ஆண்டுகளுக்குப்பின் பரதனுக்கு பட்டம் வருமென்று உனக்குச் சொன்னவர் யார்? இராமன் நாளை அரசனாவான். அவனுக்குப்பின் பட்டம் அவனுடைய மகனுக்கே கிடைக்கும். ஆகையால் அது பரதனுக்கு கிடைக்க நியாயமேயில்லை. ஏனெனில்மூத்த பிள்ளைகளே பட்டமெய்துவர். மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டம் கிடைக்காதல்லவா? உன் சக்களத்தியின் பெருமையை உத்தேசித்து உன் மகிழ்ச்சிக்கு அடையாளமாக எனக்கு மணிமாலை கொடுக்க வருகிறாய். இராமன் இந்த நாட்டை அடைந்த பிறகு பரதனை இவ்வுலகத்திலிருந்தே தூரத்தி விடுவான். இதற்கு அனுகூலமாக நீயும் செய்த கெடுதி என்னவென்றால் பரதனை அவனுடைய அம்மான் வீட்டிற்கு அனுப்பி விட்டாய். மரம், செடி முதலியவைகளும் பக்கத்திலிருப்பவைகளையே தழுவுகின்றன. பரதசத்துருக்னர்கள் பக்கத்திலிருந்தால் அரசனுக்கு அவர்களிடத்தில் அதிக பிரீதியுண்டாகும். அதையும் நீயே கெடுத்துவிட்டாய் சத்துருக்கனாவது இங்கேயிருந்திருந்தால் அவன் மூலமாக அரசனுக்கு பரதனிடத்தில் பிரீதியுண்டாகும் அதுவுமில்லை. முள்ளடர்ந்த புதரின் நடுவிலிருக்கும் மரத்தை முள்ளுக்கஞ்சி விறகுவெட்டிகள் வெட்டுவதில்லை. இராமனும் இலக்குவனும் நெருங்கிய நட்புடையவராதலால் இலக்குவன் இராமனுக்கு தீங்கு நினையான். பரதனுக்கு இராமன் தீமை செய்யாமலிருக்க மாட்டான். ஆகையால் பரதன் கேகய நாட்டிலிருந்தே காட்டுக்குப் போகட்டும். இங்கேவந்தால் நிச்சயமாய் இறப்பான். பரதனோ சிறுவன், தனக்குக்கிடைக்கவேண்டிய அரசாட்சியும் போய் சுவபாவ சத்துருவாயிருக்கும் இராமன் வசத்தி லகப்பட்டு அவன் எப்படி பிழைப்பான்? ஆகலால் பரதனைக்காப்பாற்ற இதுவே சமயம். தசரதனுக்கு வேண்டியவளென்ற கர்வத்தால் இதுவரையில் நீ அவமதித்த கோசலை தன் மகன் அரசனானதும் தன் மனதிலிருக்கிற வைரத்தை ஏன் தீர்த்துக் கொள்ளமாட்டாள்? ஆதலால் இராமன் எப்போது அரசனாவானோ அப்போதே நீயும் பரதனும் அவமானமடைவது நிச்சயம். ஆகலால் உன் மகனுக்கு நாடு கிடைக்கவும் உன் பகைவனான இராமன் காடு போகவும் ஏதாவது உபாயம் செய்" என்றாள்.

உடனே கைகேசியின் மனம் மாறிவிட்டது. பரதனுக்கு அரசுகிடைக்கும்படியான உபாயத்தைக்கூறுமாறு அவள் மந்தரையைக் கேட்டாள். இவ்வாலாற்றை ஆராய்வோம்.

கூனியாகிய மந்தரை யென்ற கிழவி கைகேசிக்கு வேண்டியவளென்பதும் அவள் இராமனுக்கு முடி சூட்டுதலை அறிந்து சினங்கொண்டு கைகேசியையடைந்து எழுப்பி அவளிடத்தில் இராமாபிஷேகத்தைக் கூறுகிறாள் என்பதும் அது வரை இராமாபிஷேகத்தை அறியாதவளாகிய கைகேசி அது கேட்டு மகிழ்ந்து கூனிக்கு ஒரு மணிமாலையை வெகுமதியாகத் தந்தாளென்பதும் தெரியவருகிறது. இதனால் தசரதன் இராமனுக்கு முடிசூட்டுவதற்காகத் தீர்மானித்துப் பல அரசர்களுக்கும் பல இடங்களுக்கும் கடிதமெழுதி பல நாட்டு மன்னவரும் வந்து சேர்ந்து கூடிப்பேசி ஊரலங்காரம் செய்து நிற்கும் வரையும் இம்முக்கியமான செய்தியைத்தனது அன்புக்கு இருப்பிடமான மனைவியான கைகேசிக்கு அறிவியாதிருந்தானென்றால் இது மிகவும் வியப்பே. இதிலேதோ சூது இருத்தல்வேண்டுமென்பது தெளிவாகிறது. ஆதலினாலே மிகவும்நயவஞ்சகனாகிய தசரதன் பட்டத்திற்குரியவனாகிய பரதனை வஞ்சித்து இராமனுக்கு முடிசூட்ட நினைக்கிறான். இதனாலேயே பரதனை அவன் பாட்டனூருக்கு அனுப்பிவிட்டதோடு இராமனையும் குடிகளோடு நெருங்கிப் பழகச் செய்து இரகசியமாக குடிகளையும் அரசர்களையும் வரவழைத்துப் பேசி உண்மை தெரியாத அவர்களுடைய ஒப்பத்தையும் பெற்று இராமனுக்கு முடிசூட்ட முனைகிறான். தான் கேகயமன்னனுக்குச் செய்துகொடுத்த வாக்குறுதியை கைகேசியும் ஏனையோரும் அறிந்திருந்தால் என் செய்வது! அதனால் தன்னுடைய வஞ்சனை வெளிப்படுமுன் இராமனுக்கு முடி சூட்டவேண்டுமென்று அவசரப்பட்டு இராமனையும் வரவழைத்து அவனுக்கு வேண்டிய நண்பர்களுடைய பாதுகாவலிலிருக்கும்படியும் பரதன் வருமுன் முடிசூட்டல் முடிவுபெற வேண்டுமென்றும் கூறுகிறான்.

இப்பாபி எவ்வாறு நீதி வழுவினனோ குடிகளுக்கு? மனமாறு முன்னமே இவனைப்பற்றிய பலவாறு இகழ்ந்த கூனி பேச்சைக்கேட்டும் சினம் கொள்ளாதிருந்ததால் கைகேசியின்கற்புநிலை ஐயுறற் கேதுவாம் நிற்க, புத்திரத்துரோகியாகிய தசரதனுடைய சூழ்ச்சிகள் வெளிப்பட்டு விடுகின்றன. ஆனால் தசரதனுடைய வாக்குறுதியை அறிந்தவர்ஒருசிலரேயாவர். அவர்கள் வசிட்டமுனிவனும்

இதன்-தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

# புராணங்கள்.

## பெரிய புராணம்

## திரு நீலகண்ட நாயனார் கதை

(மெய்கண்டான் எழுதியது.)

சிதம்பரத்தில் குயவர் குலத்தில் ஒருவர் பிறந்திருந்தார். அவர் அடிக்கடி பரமசிவனுடைய பெயர்களில்ஒன்றாகிய "திரு நீலகண்டன்" என்னும் பெயரை சொல்லிக்கொண்டு அவரிடத்தில் அன்பு பூண்டு வாழ்ந்தார். பரமசிவன் அடியார்கள் என்று சொல்லப்படுகின்ற பரதேசிகளுக்கு, அதாவது காவியுடையும், உருத்திராட்சமாலையும், சாம்பலும் அணிந்து, தெருவில் வீடுகள் தோறுஞ் சென்று பிச்சை வாங்கும் பிச்சைக்காரர்களுக்கு பிச்சை வாங்குவதற்காக மண்ஓடு செய்து கொடுத்துக்கொண்டிருந்தார். இவர் பரமசிவன் மீது அன்பு பூண்டவராயிருப்பினும் சிற்றின்பத்தில் மிகவும் ஆசையுடையவராய்ப் பல பெண்களைக் காதலித்து வந்தார். ஒரு நாள் இவர் ஒரு பரத்தை வீட்டுக்குச் சென்று அவளோடு இன்பந்துய்த்துவிட்டுவீட்டுக்கு வந்தார், வந்து தமது மனைவியிடம் இன்பந் துய்ப்பதற்குச் சென்றார். உடனே அவள்கோபங்கொண்டு "வேறு பெண்ணைக் காதலித்து அவளோடு கூடியிருந்த நீ எம்மைத் தொடாதீர்" என்று விலகி நின்றாள். மறுபடியும் பல இனிய சொற்களைத் தமது மனைவியிடம் கூறி அவளைத் தொட்டு இழுத்து வலிந்து சேரப் போனார். அப்பொழுது அந்தம்மாள்கோபங்கொண்டு "திரு நீலகண்டத்தின் மீது ஆணையாக எம்மைத் தொடாதே" யென்றுஆணையிட்டுவிட்டார். உடனே திரு நீலகண்ட நாயனாருக்குக் கோபம்வந்து "இனி, பெண்களுடனசேருவதுமில்லை. அவர்களைத் தொடுவதுமில்லை" என்று சபதஞ் செய்துகொண்டார்- அன்றுமுதல் திரு நீலகண்டரும் அவர் மனைவியும் ஒருவர்க்கொருவர் உடல் சம்பந்த மில்லாமலே குடும்பம் நடத்திகொண்டு வந்தனர். இப்படியே வெகுகாலஞ் செல்ல இருவரும் கிழவனும் கிழவியுமாயினர். இருவருக்கும் பிள்ளையுமில்லை.

இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் பரமசிவன் ஒரு பரதேசி வேடங்கொண்டு கையில் பிச்சை வாங்கும் பாத்திரமொன்றை எடுத்துக்கொண்டு திரு நீலகண்டரிடம் வந்து அவரிடம் அப்பிச்சை யோட்டைக் கொடுத்து "நான் திரும்பிவந்து கேட்கும்போது கொடுக்கவேண்டும்" எனக் கூறிச் சென்றார்- திரு நீலகண்டரும் ஓட்டை வாங்கி பத்திரமாக வைத்திருந்தார். பல நாள் சென்றபின் பரமசிவன் திரு நீலகண்டரிடம் கொடுத்து வைத்திருந்த ஓட்டைக் காணாமற் போகும்படி செய்துவிட்டு மீண்டும் முன் வந்த பரதேசி வடிவத்துடன் திரு நீலகண்டரிடம் வந்து தான்கொடுத்த ஓட்டைக்கொடுக்கும்படி கேட்டார். திருநீலகண்டர் ஓடுவைத்த இடத்திற் சென்று பார்க்க ஓடுகிடைக்கவில்லை. உடனே ஓடு காணாமற்போன செய்தியைக் கூறி அதற்குப் பதிலாக வேறு ஓடு கொடுப்பதாகக் கூறினார். பரமசிவனாகியபரதேசி அதற்குச்சம்மதியாமல் "எனது ஓட்டை நீதான் ஒளித்துவைத்துக்கொண்டாய்" என்றுகூற, திருநீலகண்டர் தான்அவ்வாறு செய்யவில்லையென்று பலவாறு கூறியும் கேட்காமல், "நீ யெடுக்கவில்லையானால், நீ உன் மகன் கையைப்பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கிஎடுக்கவில்லையென்று சொல்லிவிடு" என்றுபரதேசிகேட்டார். அதற்குத் திருநீலகண்டர் "எனக்குப்பிள்ளையில்லை" யென்றுகூறினார். "அப்படியானால் உனதுமனைவியின் கையைப்பிடித்துககொண்டு அவ்வாறு செய்" யென்று சொன்னார். திருநீலகண்டர் "நாங்கள் செய்துகொண்ட ஒரு சபதங்காரணமாக இருவரும் ஒருவரையொருவர் தொடுவதில்லை. ஆதலால நானே குளத்தில் மூழ்கி அவ்வாறு சொல்லுகின்றேன்" என்றார், உடனே 'பரமசிவ' பார்ப்பனப் பரதேசி "நான் தில்லைவாழந்தணர்களிடம் சொல்லுகின்றேன்" என்று திருநீலகண்டரையும் இழுத்துக் கொண்டு தில்லைவாழந்தணர் சபையிடஞ் சென்று நடந்தசெய்தியைக் கூறினார். அவர்களும் திருநீலகண்டர் வாக்குமூலத்தையுங்கேட்டுக் கடைசியாக "திருநீலகண்டர் பார்ப்பனப்பரதேசியின் ஓட்டைக் கொடுத்துவிடவேண்டும் இல்லாவிட்டால் அவர் சொல்லுகின்றபடி தன் மனைவியின் கையைப்பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கவேண்டும்" என்று தீர்ப்புச்செய்தார்கள். அதைக்கேட்டுத் திருநீலகண்டர் தமது வீட்டுக்குவந்து ஒருமூங்கிற்கழியையெடுத்துத் தானும் தன்மனைவியும் அதன் இருமுனையையும் பற்றிக்கொண்டு குளத்தில் இறங்கி மூழ்கப்போகும்போது, அந்தணர், மனைவியின் கையைப்பிடித்துக்கொண்டு மூழுகவேண்டுமென்று சொல்ல, உடனே திருநீலகண்டர் தனக்கும் தன் மனைவிக்கும் முன்நடந்த செய்தியை எல்லோரும் அறியும்படி கூறி மூழ்கியெழ இருவரும் வாலிபப்பருவமுடையவராகக் காணப்பட்டனர். உடனே ஆகாயத்தில் பரமசிவன் பார்வதியுடன் காளைமாட்டின்மீது தோன்றினார், திருநீலகண்டருங் கண்டு வணங்கினார். பரமசிவன் "நீங்கள் இக்கோலத்துடனேயே எனது திருவடியை யடைவீராக" என்று கூறிச் சென்றார். இவர்களும் பலகாலம் இவ்வுலகில் இன்பத்தை யனுபவித்துவிட்டுப் பிறகு பரமசிவன் திருவடியை யடைந்து இளமை பெற்றுப் பேரின்பமுடன் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு திருத்தொண்டத்தொகையில் "திரு நீலகண்டத்துக் குயவனார்க்கடியேன்" என்று ஒரே வரியினாற் கூறப் படுகின்றது.

திருத்தொண்டர் திருவந்தாதியில், "தன் மனைவி சிவன் மீது ஆணையிட்டமையால், அவள் மீதுள்ள காம இச்சையைத் துறந்து வாழ்ந்து வயதேறிய பின் சிவன் அருளால் தானும், தன் மனைவியும் இளமை பெற்ற இன்பமடைந்தார்" என்று கூறப்படுகின்றது.

இதனை விரித்துத் தான் சேக்கிழார் மேற்காட்டிய கதையைக் கூறியிருக்கின்றார். சேக்கிழார் திரு நீலகண்டரைக் காமுகராக வைத்துக் கூறுகின்றார். அவர் பரத்தையை நாடிச் சென்றதாகவுங் கூறுகின்றார். பரமசிவன் அடியாரா யிருக்கின்றவர்களுக்கு இது தகுதியான செய்கை யாகுமா வென்பதுதான் நமது கேள்வி. அன்றியும் எல்லாம வல்ல கடவுள் திரு நீலகண்டரையும் அவர் மனைவியையும் வாலிப பருவமுடையவராகச் செய்யவேண்டுமானால் நினைப்பு மாத்திரையினாலேயே செய்திருக்கக்கூடாதா? அதற்காக பார்ப்பனச் சாமியார் வேடம் பூண்டுகொண்டு வந்து ஏன் துன்பப்படவேண்டும், எல்லாம் வல்ல கடவுளாயிருந்தால் இப்படி வந்திருக்க முடியுமா?

மற்றும் திரு நீலகண்டரும் அவர் மனைவியும் குளத்தில் மூழ்கி யெழுந்தவுடன் வாலிபராகக் காணப்பட்டார்களாம். இது எவ்வளவு தூரம் பொருத்தமான செய்தியாகும். ஒரு சமயம் கண் கட்டு வித்தை செய்திருப்பாரோ என்று தான் சந்தேகிக்கலாமேயன்றி உண்மை யென்று எவ்வாறு சொல்லமுடியும்? அன்றியும். பரத்தை வீட்டிற்குச் சென்றதும், குளத்தில் மூழ்கி யெழுந்ததும், பரமசிவன் பார்ப்பனச்சாமியாராக வந்ததுமாகிய செயல்கள் சேக்கிழாரால் உண்டாக்கப்பட்டனவேயன்றி வேறன்று.

திரு நீலகண்ட நாயனார் புராணத்தில் பார்ப்பனீயத்திற்குப் பெருமை கொடுத்திருப்பதையுங் காணலாம்.

"நல்லொழுக்கந் தலைநின்றார் நான் மறை
பின் துறை போனார்,
தில்லை வாழ் அந்தணர்கள் வந்திருந்த
திருந்தவையில்"

என்று தில்லை வாழ்கின்ற பார்ப்பனர்களின் பெருமை கூறப்படுகின்றது.

மற்றும் பரமசிவன், சாமியார் வடிவங் கொண்டு வந்தானென்றால் போதுமானதாயிருக்க, பார்ப்பனச் சாமியார் வடிவுடன் வந்தானென்று கூறுவதற்குக் காரணம் என்ன? பார்ப்பனச் சாமியாராக வரவில்லை. பார்ப்பனராக வந்தாரென்று சிலர் கூறலாம். பார்ப்பனராக வந்தால் பிச்சை யோடு கொண்டுவரவேண்டிய அவசியமில்லையன்றோ?

சிதம்பரத்தில் இப்பொழுதும் இளமையாக்கியார் கோயிலென்றும், இளமையாக்கியார் குளமென்றும் இருக்கின்றது. இவை இச் சரித்திரம் உண்மை யென்பதற்கு ஆதாரமென்று கூறுவார் சிலர். ஆனால் பெரிய புராணத்தில் அக் கோயிலுக்குத் திருப்புலீச்சுரமென்று கூறப்படுகின்றது. அதனால் இளமையாக்கியார் கோயிலென்பது சேக்கிழார் கதையை யுட்கொண்டு பிற்காலத்தில் வழங்கிய பெயரே யாகும்.

பரமசிவன் ஆகாயத்தில் பார்வதியுடன் காளை மாட்டின்மீது தோன்றினார் என்பதும் எவ்வளவு தூரம் உண்மை யென்பதையும் ஆராய்ந்துணர வேண்டுகின்றோம்.

## அருப்புக்கோட்டை சுயமரியாதைப் பிரசாரம்

இவணிருந்து சுயமரியாதைத் தொண்டர்களான திரு. கருப்பையாபிள்ளை அவர்களும், டாக்டர் திரு. பாண்டியன் அவர்களும் 8—9—28 ல மல்லங்கிணறு அயன் ரெட்டிபட்டி சகம்பட்டி முதலிய இடங்களுக்குச்சென்று, பார்ப்பனவரி, சுயமரியாதை இயக்கம், ஆகிய விஷயங்களைப்பற்றி பிரசங்கம் செய்தார்கள். கிராமங்கள்தோறும் சுயமரியாதை பரவுகின்றது.

சிவசுப்பிரமணியன்.

## ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரின் தெளிவும் பண்டிதர்களின் மயக்கமும்.

இப்பொழுது வாசகர்கள் பொதுவாக தெளிவிற்கும் மயக்கத்திற்குமுள்ள வித்யாசத்தை தெரிந்துகொள்வதற்காக இவ்வியாசத்தை எழுதுகிறேன்.

ஸ்ரீமான் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்களை 1920-ம் வருஷத்தில் மதுரையில் தெப்பக்குளத்தின் கரையின் மீது பிரசங்கம் செய்யும் போதும் இதில் குறிப்பிடும் பண்டிதர்களை பல பொதுக் கூட்டங்களில் பிரசங்கிக்கும்போதும் பார்த்திருக்கின்றேன். இந்த இரு கூட்டத்தாரும் அக்காலத்தில் ராஜீய விஷயத்தில் பலவித அபிப்பிராய முடையவர்களாகக் காணப்பட்டாலும் மத விஷயத்தில் ஏகோபித்த அபிப்பிராய முடையவர்களாகக் காணப்பட்டார்கள். அதன் பிறகு இவர்களின் மத அபிப்பிராயத்தை பார்ப்பதற்கு வசதியில்லாமையால் ஒன்றும் தெரியாமலிருந்தது. இப்போது மூன்று மாத காலமாக எனக்கு "குடி அரசு" வருகிறது. அதைப் பார்ப்பதினால் எனக்குண்டாகும் அபிப்பிராயத்தைவாசகர்களுக்குத்தெரிவிப்பது எனது கடமை என்றெண்ணி இதை எழுதலானேன்.

### தெளிவு.

தெளிவுஎன்பதுதான் அறிவு எனப்படும். எப்படியெனில், மனிதனுடைய மனமானது விருப்பு வெறுப்புக்கு கட்டுப்பட்டு இருக்கிறது. அந்த விருப்பு வெறுப்பினால் ஒருவகைப் பற்றுக்கொண்டு மனித சமூகத்தை ஏமாற்றி வருகிறது. இதனால் மனிதனை மனிதன் ஏமாற்றற் கிடமுண்டாகிறது இதன் பயனால் மனிதன், தான் செய்யக் கடமைப்பட்டிருக்கும் வேலையிலிருந்து தவறவேண்டியவனாகிறான். ஆகையால் முன் சொன்ன விருப்பு வெறுப்புக்கு மனதை ஆளாக்காமலிருந்தால் அப்போது தானாகவே அறிவு என்கிற தெளிவு உண்டாகிறது.

இந்த அறிவு உலகிலுள்ள சகல மக்களும் ஒன்றென்றும், அவர்கள் உலகிலுள்ள சகல சுதந்திரங்களையும் சமமாக அனுபவிக்க உரிமையுடையவர்கள் என்றும், அவர்களை எவ்வகையாலும் ஏமாற்றக் கூடாதென்றும், அப்படி ஏமாற்றமுயன்றால் கடவுளுக்கு ஜவாப் சொல்ல நேரிடுமென்றும் நினைத்து மக்களிடையே நல்லுணர்ச்சியையும் பரஸ்பர நண்பையும் சமத்துவத்தையும் போதிக்க ஆரம்பிக்கிறது.

இத்தகைய அறிவைத்தான் குறளாசிரியர் "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போலமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி" எனக் கூறியிருக்கிறார்கள். ஆனால் பரிமேலழகர் முதலிய பிற்காலத்தவர் இதைவேறுவிதமாகக் கொள்ளுகின்றனர். இதற்கு முன்னுள்ள குறட் பாக்களைப் பார்க்கும்போது மனதைப் பற்றிய தென்பது நன்கு விளங்கும். ஏனெனில் மனம் விருப்புக்கு ஆளாகும் போதும் வெறுப்புக்கு ஆளாகும் போதும் அவ்வவ்வழி செல்வது இயல்பு. ஆகையால் இவ்விரண்டிற்கும் மனம் ஆளாகாமலிருக்கும்போதுதான் நடுவு நிலைமை ஏற்படுகிறது. அதற்குத்தான் தெளிவென்றும அறிவென்றும் பெயர். அவ்வறிவு தன்னலமின்றி பிறர் நலத்துக்கே உழைக்குமாதலால் உலகிலுள்ள சான்றோர் அவ்வறிவை தொன்றுதொட்டு போற்றி வந்தனர். அத்தகைய அறிவு மக்களுக்கு ஒரு சிறிதும் உதயமாகாமல் இருக்கும்படி வெகுகாலம் செய்துவிட்டது. இப்போது கடவுளின் அருளினால் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அவ்வறிவைப் பெற்றிருக்கின்றாரென்று சொல்வது மிகையாகாது.

ஸ்ரீமான் நாயக்கர் மதப்பற்றுக் கொண்டு எல்லா மத நூல்களையும் தான் ஆராய்ச்சி செய்தோ அல்லது பிறருதவியின் பேரில் ஆராய்ச்சி செய்தோ மதம், மத புராணம் ஆகியவற்றை புரட்டு என்று சொல்லுகிறார். இதில் உண்மையிருக்கிறது. மதம், புராணம் மக்களுக்கு நன்மையை உண்டு பண்ணவேண்டியிருக்க தீமையையே உண்டுபண்ணிவந்திருக்கிறது. இதனால்தான் மக்கள் எந்த மதத்திலும் நிலைபெற்றிராமல் மத மாற்றுதலை அடைந்திருக்கிறார்கள்.

இதை நன்குணர்ந்த ஸ்ரீமான் நாயக்கர் மக்களுக்கிடையே சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய உண்மைகளைப்போதிப்பதற்கு தம் அறிவை உபயோகித்துக் கொண்டு வருகிறார். இதைக் கண்ட சில மதப்பற்றுடைய பண்டிதர்கள், பகற் குருடாகிய கோட்டான் சூரியனை நிந்திப்பது போல் இவரை நிந்திக்கிறார்கள். அஃதென்னவெனில் இப்பொழுது காணப்படும் மதங்களில் பலவற்றிற்கு மூலம் வேதமே. அவ்வேதம் என்பது விருப்பு வெறுப்பு என்னும் இரண்டிற்கும் ஈடுபட்ட மனதையுடையவனாகிய பர்வதன் என்னும் ஒரு பிராமணன் முயற்சியால் ஆக்கப்பட்டது. அவ்வேதம் பல்வேறு உயிர்களை சிறிதும் அருள், அன்பு, நட்பு இன்றி கொன்று புசித்து சாராபானம் செய்வதற்கென்றே ஏற்படுத்தப் பட்டது. பிறது கொலையில் அபிமானங் கொண்ட ரிஷிகள் அந்த வேதத்தைக் காரணமாகக் கொண்டே ஸ்மிருதி, இதிகாசம், புராணம் முதலிய பெயர்களைக் கொடுத்து பலவித நூல்களை இயற்றினார்கள். இந்த ரிஷிகளின் கூற்றினால் மக்களுக்குள் கொலை முதலிய பாதகச் செயல்கள் சாவ சாதாரணமாகப் போய்விட்டது.

"நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்" என்று தொல்காப்பியனார் கூறுகின்றார். இதன் பொருள் அறிவனாகிய மனிதன் நெறியின் வழியே உலகத்தை செலுத்தினனென்பது. நெறி என்பது நீதி. அத்தகைய நீதியுடன் கூடின தேசம் வேதகாலம் தொட்டு நீதி தவறி எவ்வுயிர்களையும் ஹிம்சிக்கலாமென்கிற எண்ணத்துடன் பல்வேறு புரட்டுகளையும் தந்திரங்களையும் உடையதாகி இப்போது காணப்படும் கேவல நிலைமைக்கு வந்து விட்டது. இதைப் பண்டிதர்கள் குருட்டுத்தனமாக நம்பி இதை நன்கறிந்து உண்மையை வெளிப்படுத்தும் ஸ்ரீமான் நாயக்கரை தூஷித்து வருகிறார்கள். எவ்வளவு தூஷித்த போதிலும் அவற்றை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யாமல் முனைந்து நின்று தம அறிவினால் இம்மூட நம்பிக்கையைப் போக்க முனைந்திருக்கும் நாயக்கரை பாராட்டாமலிருப்பதற்கில்லை.

### மயக்கம்.

மயக்கமென்பது:—எந்த மனிதன் மனம் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு விடுகிறதோ அப்போது அவன் மனங்கலங்கி உண்மையை அறிவதற்கு ஹேதுவில்லாமல் போய் விடுகிறது. இதற்குத்தான் நம்முன்னோர்கள் மயக்கமெனப் பெயரிட்டிருக்கிறார்கள். இம்மயக்கம் இப்போது பல பண்டிதர்களிடம் பரக்க காணலாம். எவ்வாறெனில் உயிர்களை ஹிம்சிப்பதற்காகவும் சுராபானம் செய்வதற்காகவும் ஏற்பட்ட வேதத்தை நாட்டு மக்கள் சமணர்களின் ஜீவகாருண்ய போதனையால் அங்கீகரிக்காமல் இருந்த காலத்தில் வேதாரண்யம் (மறைக்காடு) என்னும் ஊரில் பதுங்கிக் கொண்டிருந்த சம்பந்தனென்னும் ஒரு பிராமணன் ஹிம்சையில் அதிக பற்றுக்கொண்டு முன் பர்வதனால் செய்த கூற்று வடிவு கொண்ட வேதத்தை அமுலுக்கு கொண்டுவர மக்களிடை அநேக சூழ்ச்சிகள் செய்தும் பயன்படாமற் போயிற்று. அதனால் அக்காலத்திய மக்கள் அவன் தங்கியிருந்த ஊருக்கு வேதாரண்யம் என்றும் மறைக்காடென்றும் பெயரிட்டு வழங்கிவந்தனர். சிலகாலம் கழித்தபின் கொடியமனதுடைய அச்சம்பந்தன் பாண்டியன் மனைவிமூலம் பாண்டியனை வசப்படுத்தி சமணர்களையும், சமண முனிவர்களையும் கழுவேற்றி வேதத்தை நாட்டின் கண்பரவச்செய்தான். இதற்கு அகச்சான்றும் புறச்சான்றுமிருக்கின்றன. இத்தகைய கொடியோனாகிய அச்சம்பந்தனை பெரியபுராணத்தில் போற்றியிருப்பதை பலபண்டிதர்கள் நன்குணர்ந்திருந்தும், அன்பு என்பது அப்பெரியபுராணத்தில்தான் ததும்புகிறதாக பிரசங்கமேடையில் சொன்மாரி பொழிகின்றார்கள். என்னே இவர்களது மயக்கம்! எவ்வுயிரையும் தன்னுயிர்போல் கருதி நண்பு அன்பு, தயை, சமத்துவம் ஆகியவற்றை செலுத்துவது முன்னோர்களின்கூற்று. நண்பென்பது எல்லாஜீவனகளிடத்தும். ஸ்நேஹம் கொள்வது. அன்பென்பது குணவான்களிடத்து சந்தோஷப்படுவது. தயையென்பது கஷ்டப்படும் ஜீவன்களிடத்து உண்டாகும் கருணை சமத்துவமென்பதும் விருப்பு வெறுப்பின்றி யாவரையும் சமமாகவர்த்திப்பதாகும்.

மேற்சொன்ன நான்கும் அஹிம்ஸாதர்மத்தின் அடிப்படையானதர்மங்கள். இதில் அன்புஎன்பது குணவான்களிடம் பொறாமை கொள்ளாது அவர்கள்பால் சந்தோஷம் காட்டுவது என்றேற்படுகிறது. இதனால் அஹிம்ஸாதர்மத்துக்கு அஸ்திவாரமான இந்த அன்பு நட்பு தயை சமத்துவம் ஆகிய நற்குணங்களையே பூஷணமாக உடைய சமணர்களை வேதத்தின் பெயராலும், வேள்வியின் பெயராலும் பாண்டியனை வசப்படுத்தி சம்பந்தன் ஹிம்ஸித்தானென்பது உலகறிந்த

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

## ஹிந்து பெண்களின் உரிமை.

### ஆண்களின் மூட்டாள்தனமான சட்டம்

—0—

### திரு. ஜயக்கர் சொற்பெருக்கு,

பம்பாய் பிரபல வக்கீலும் மிகுந்த செல்வாக்கு பெற்றவருமான ஸ்ரீ எம். ஆர். ஜெயக்கர் சமீபத்தில் பம்பாய் இளைஞர்கள் சங்கத்தில் "ஹிந்துப் பெண்களின் உரிமை" யென்னும் பொருள்பற்றி ருசிகரமான சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது:—

இந்நாட்டில் இதற்குமுன் எக்காலத்திலுமில்லாத மாபெரும் இயக்கம் ஒன்றை பெண்கள் தோற்றுவித்திருக்கின்றனர். அது இப்போது குழந்தைப்பருவத்திலிருந்து வருகிறது. அதன் மூலம் பெண்கள் தங்களுடைய உரிமைகளுக்குப் புத்துயிர் அளிக்கவேண்டுமென்று கேட்கின்றனர்.

ஆண்கள் தங்களுக்குச்சாதகமாக தவறான வழியில் ஹிந்து சட்டங்களை வியாக்கியானம் செய்து கொண்டதனாலேயே பெண்களுக்கு ஆண்களிடமிருந்து நியாயமான உரிமைகள் கிடைக்கவில்லையென்றும், பெண்களின் முன்னேற்ற வேலைகள் தடைப்பட நேர்ந்ததென்றும் நவீனப் பெண்கள் குறைகூறுகின்றனர். தற்கால சமூக தேவைகளுக்குத்தக்கவாறு இந்திய நீதி ஸ்தலங்கள் சட்டங்களை வியாக்கியானம் செய்வதில்லையென்று ஜஸ்டிஸ் தேலங் சமீபத்தில் அபிப்பிராயம் கூறியுள்ளார். சமூகத்தேவைகளுக்குத் தக்கபடி சட்டம் முன்னேற்றமடையவில்லை. அதனால் தற்காலம் பெண்களினிடையே ஒரு தீவிரமான உணர்ச்சி மிகுந்து அவர்கள் தங்களுடைய உரிமைகளை மீண்டும் பெறத்தொடங்கியிருக்கும் இயக்கம் நாளுக்கு நாள வலுவடைந்தும் வருகிறது.

#### சுயநல ஆடவர்கள்.

ஹிந்து சமூகத்தின் தற்கால நிலைமையில் பெண்கள் தங்களுடைய கணவனை தேர்ந்தெடுப்பது போன்ற உயிராதாரமுள்ள பிரச்சினைகள் சம்மந்தமாக ஆண்கள் முற்றிலும் சுயநலமிகளா யிருப்பதாக அவர்கள் குறைகூறுகிறார்கள். அவர்கள் பால்ய விவாஹத்தை கண்டிப்பதுடன் பெண்களின் விவாஹ வயதை 16—ஆக உயர்த்தவேண்டுமென்றும் கூறுகிறார்கள். இதை அமுலுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு விவாஹம் செய்தால் அவர்களுக்கு தண்டனையளிக்க வேண்டுமென்கின்றனர். பெண்களின் விவாஹவயதை 12 ஆக நிர்ணயித்தாலும்கூட அதையும் ஆக்ஷேபிக்கத்தக்க கனவான்களிருக்கின்றனர். இதுமிகவும் வருந்தத்தக்கது. அத்தகையோர்கள், விவாஹ வயது சம்மந்தமாக இந்தியா சட்டசபை நியமித்த கமிட்டிமுன் தோன்றி பெருத்த ஆக்ஷேபம் செய்தார்கள். ஆனால் கடைசியாக பெண்களின் விவாஹவயது 14 ஆக இருக்கவேண்டுமென்று ராஜியாக முடிவு செய்யப்பட்டது நமக்குஒருஆறுதலை யளிக்கின்றது.

#### கலப்பு விவாகங்கள்.

இனி பெண்கள் கணவனைத்தெரிந்தெடுப்பது சம்பந்தமாக தங்களுக்கு எந்தஜாதியிலிருந்தும் ஒருவனை கணவனாகத் தெரிந்தெடுக்கக்கூடிய சுதந்திரம் அளிக்கவேண்டுமென்று கூறுகிறார்கள். ஏனெனில் சிலவகுப்புக்களில் ஆண்கள் மிகச் சொற்பமாயிருப்பதால் பெண்கள் தங்களுடைய பந்துக்களிலேயே விவாஹம் செய்துகொள்ளவேண்டி யிருக்கிறதினால் அச்சமூகம் பிற்போக்கான நிலைமையை அடைகிறது, ஆகையால் அவர்கள் இப்போது தங்களுடைய ஜாதியை விட்டு அடுத்தஜாதியிலும் விவாஹம் செய்யக்கூடிய உரிமை யளிக்கப்படவேண்டுமென்றுகேட்கின்றனர் அவர்களுடைய பேச்சுக்கு ஹிந்து சமூகம் கீழ்ப்படியக்கூடிய ஒருகாலம் சீக்கிரம் வந்துவிடும் அப்போது நவீனப்பெண்களின் தேவைக்கேற்றவாறு ஹிந்து சட்டங்களும் மாறுதலடையக் கடமைப்பட்டிருக்கிறது. இது சம்மந்தமாக சட்டங்களும் சிறிதளவு ஏற்கனவே முன்னேற்றமடைந்து வந்திருக்கிறது காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ஷா உயர்ஜாதி ஆண்களுக்கும் தாழ்ந்த ஜாதி பெண்களுக்கும் நடக்கும் விவாஹங்கள் முற்றிலும் நியாயமானதென்றும் அது செல்லத்தக்கதென்றும் அவைகள் ஹிந்து சட்டத்துக்குட்பட்டவை யென்றும் தீர்ப்பு கூறியிருக்கிறார், என்றாலும் பெண்கள் இத்துடன் திருப்தியடையவில்லை. அவர்கள் தாழ்ந்த ஜாதி ஆண்களுக்கும் உயர்ந்தஜாதி பெண்களுக்கும் நடக்கும் விவாகங்களும் சட்டரீதியானதெனச் செய்யப்பட வேண்டுமென விரும்புகின்றார்கள். சுருங்கச் சொல்லின் ஒவ்வொருவரும் தன் தன் இஷ்டப்படி விவாகம்செய்துகொள்ளக் கூடிய உரிமையளிக்கப்பட வேண்டுமென்கின்றனர். அவர்கள் கூறுவது முற்றிலும் நியாயமென்றே நான் கருதுகிறேன். அவர்களும் இதில் கூடிய சீக்கிரம் வெற்றி பெறுவார்கள்.

#### முட்டாள் தனமான சட்டங்கள்.

இனி விவாக ரத்து, மறு விவாகங்கள், ஜீவனாம்சம் முதலியவைகள் சம்மந்தமான தற்கால சட்டங்கள் முட்டாள் தனமானதென்றும், இயற்கைக்குப் பொருத்தமற்றதென்றும் பாரபக்ஷமுள்ளதென்றும் அவர்கள் கூறுவதுடன் சமூகத் தேவைக்கேற்றவாறு அவற்றைத் திருத்த வேண்டுமென்றும் கூறுகின்றனர். சில நிபந்தனைகளின் பேரிலேயே விவாக ரத்து செய்ய உரிமையளிக்க வேண்டுமென்றும் கூறுகிறார்கள். வைதீக ஹிந்துக்கள் இதைக்கண்டு பெருந் திகிலடையலாம். என்றாலும், அதற்குப் போதுமான ஆதாரவிருக்கிறது, ஹிந்துக்கள் விவாகம் மத சம்மந்தமானதென்றும், பெண்கள் ஒரு தடவைதான் விவாகம் செய்து கொள்ளலா மென்றும் கூறுகின்றார்கள். ஆனால் பெண்களோ இவைகளெல்லாம் மனிதர்களால் செய்யப்பட்ட சட்டங்களென்றும், ஒரு மனிதன் தன்னிஷ்டப்படி எத்தனையோ விவாகம் முடித்துக்கொள்ளலா மென்றால் ஏன் ஒரு பெண் அவ்விதம் செய்துகொள்ளக் கூடாதென்றும் கேட்கின்றனர். இக்கேள்விககு பொருத்தமான பதிலளிப்பது கஷ்டம். சில வருஷங்களுக்கு முன்னரே கணவனை யிழந்த பெண்கள் மறு விவாகம் செய்து கொள்ளலாமென்ற உரிமையளிக்கப்பட்டது. ஆனால் இப்போது அவர்கள் இன்னும் அதிகப்படியான உரிமை வேண்டுமென்கின்றனர். அதாவது புருஷன் திடீரென ஓடிப் போய்விட்டால் அல்லது மீளா நோய்வாய்ப்பட்டு விட்டால், அல்லது சந்நியாசியாகப்போய்விட்டால் அத்தகைய கணவர்களின் விவாகத்தை ரத்துச் செய்யக்கூடிய உரிமை அளிக்கவேண்டுமென்று கேட்கின்றனர். கணவன் மனைவியை விலக்கி வைக்கலாமென்றும், மனைவி கணவனை விலக்கி வைக்க முடியாதென்றும் தற்கால சட்டங்கள் கூறுவது மிகவும் வருந்தத்தக்கது. ஹிந்து சட்டத்தின் மற்றொரு விநோதமென்னவெனின், கணவன் தனது வீட்டில் மனைவியுடன் எத்தனையோ பரத்தையர்களை வைத்துக் கொண்டிருந்தாலும் மனைவி விவாக ரத்துசெய்ய முடியாதாம். இன்னும் மனைவி கணவனை விட்டுப் பிரிந்து தனிமையாக வசிக்க எண்ணினாலும் கணவன் கோர்ட்டு மூலம் அவளை தன்னுடன் வசிக்கும்படி கட்டாயப் படுத்தலாம். கணவனுக்கு அளிக்கப்பட்டிருக்கும் இத்தகைய எல்லை கடந்த உரிமைகளைக் குறைக்க வேண்டுமென்றும், உதாரணமாக கணவன் பல மாதர்களை வைத்துக்கொண்டிருந்தாலும், அல்லது மீளாநோய்வாய்ப் பட்டிருந்தாலும், அல்லது ஒழுக்கம் தவறி நடந்தாலும் கோர்ட்டார் அவனுக்கு அத்தகைய விவாக உரிமைகளை அளிக்கக் கூடாதென்றும் கூறுகின்றனர். பெண்கள் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட மைனர்களா யிருந்தால் கோர்ட்டார் அவர்களை கணவனுடன் வசிக்கும்படி கட்டாயப் படுத்தக் கூடாது. தற்கால சட்டத்தின் கீழ் கணவன் தனது வீட்டில் வேறொரு பரத்தையை வைத்திருப்பதாகவும், மனைவியின் உயிருக்கு ஆபத்தோ கேடுமென்றும் மனப்பூர்வமாகத் தெரிந்தால் மட்டும் கோர்ட்டார் மனைவியைக் கணவனுடன் வசிக்க கட்டாயப் படுத்துவதில்லை. மற்ற சுதந்திர நாடுகளில் சட்டங்கள் நாளுக்கு நாள் மாறுதலடைந்து வந்திருக்கின்றன. ஆனால் இந்தியாவில் மட்டும் காலத்துக் கேற்றுற்போல் சட்டங்கள் மாறுதலடையவில்லை.

திராவிடன்

## உண்மை விளக்கம்.

### மலாய் நாட்டிலிருந்து

திரு. கோ. ரத்னசபாபதி எழுதுவது.

"குடி அரசு" பத்திரிகையானது சென்ற நான்கு ஆண்டுகளாக நந்தமிழ்நாட்டில் வெளிவரும் பத்திரிகைகளில் தலை சிறந்து விளங்குவது யாரும் மறுக்கமுடியாத ஓர் உண்மையன்றோ?

ஆசிரியர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும் அறிவுச்சுடர் கைவல்யசாமியார் அவர்களும் "குடி அரசின்" குழுவினராகிய தன்னலங்கருதாத இதர கட்டுரைக்காரர்களும் "குடி அரசின்" வாயிலாக நம்மக்களிடை பரவியுள்ள மூடக்கொள்கைகளையும் பொருத்தமில்லாத கட்டுக்கதைகளையும் அடி நிலைமையிலிருந்து தகுந்த ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி உண்மையை வெளியிட்டு வருவதினால் எல்லாவகையிலும் அடிமைப் பட்டுக் கிடந்த நாம் அறிவு பெற்று சுயமரியாதையின் உள்ளுரை இன்னதென உணர்ந்துவருவது கண்கூடு.

"சுயமரியாதை" என்னும் பரிசுத்த இயக்கத்தினால் நாடு இதுசமயம் எந்நிலையில் இருக்கிறதெனசொல்லுங்கால், அது அரசியல்புரட்டுகளையும், மதப்புரட்டுகளையும், ஆட்சி முறையில்(சுயநல) பார்ப்பனர்களே பெரும்பாலும் ஆதிக்கம் பெற்று பார்ப்பனரல்லாதாருக்கு செய்துவரும் துரோகங்களையும் வெளியாக்கி பார்ப்பனர்களின் சூழ்ச்சி இன்னதென உணர்த்திபுத்துயிர் பெறச்செய்து அடிமைத்தன்மையை விலக்கியும்பிறவியில் உயர்வு தாழ்வு என்னும் பேதங்களை அகற்றியும், குடிசை முதல் கோபுரம் ஈறாக உள்ள மக்களிடை சுயராஜிய ஒளி வீசிக்கொண்டும்வருகிறது. இதற்குச் சான்று "குடி அரசு" வின் அபிவிருத்தியன்றோ?

இந்நிலையில் சுயநலமே பிறப்புரிமையாகக் கொண்ட பார்ப்பனர்களும் அவர்களின் தயவை எதிர்பார்க்கும் சில பார்ப்பனரல்லாதாராகிய தாசர்களும் பொறாமை கொண்டு சுயமரியாதையை இழந்து தங்கள் தங்களின் வயிற்றுப்பிழைப்பையே பெரிதென நினை

# "இந்திய மாதா"

(திரு அய்யாமுத்து எழுதுவது)

## உயிர்ப்பலி.

அமெரிக்கமாதின் கண்களை முதல் முதல் உறுத்தியது கல்கத்தாவின் அருகிலுள்ள காளி கோவிலாகும். இந்தியாவின் ஆத்ம சக்தியையும், அபூர்வ ஞானத்தையும், அத்துவைத, துவைத மார்க்கங்களையும், வேதாந்தத்தின் பரந்த நோக்கத்தையும் அமெரிக்க மேடைகளில் பிரசங்க மாரி பொழிந்து வந்த சுவாமி விவேகானந்தருடைய ஆத்ம ஞான குருவாகிய சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சேவை புரிந்துவந்த கோவில், இக்காளி கோவிலாகும். "எனது குருநாதர்" என்ற பிரசங்கத்தை அமெரிக்காவில் நிகழ்த்திய போது சுவாமிகள் இக்கோவிலைப் பற்றி வெகுவாகப் பேசியுள்ளார். ஆதலின் இக்காளி கோவில் உலகப் பிரசித்திபெற்ற

---

த்து உண்மையை மறைத்து "ஜனங்களை வமாற்றிப் பிழைத்துவந்த பிழைப்புக்கு ஆபத்து வந்துவிட்டதே" என பீதிகொண்டு வயிற்றெரிச்சலுடன் தாம் பேசுவதும் எழுதுவதும் இன்னதென்றுகூட நிதானமில்லாமல் மனம் தடுமாறி சுயமரியாதை இயக்கத்தின் மீதும் அதன் தலைவர்கள் மீதும் சீறி விழுவது ஆச்சரியமல்ல.

இந்நிலையில் உள்ளவர்கள்தான் சீர்திருத்தக்காரர்களாம்! சமயாச்சாரிகளின் பிரதிநிதிகளாம்!! விந்தையினும் விந்தை! இவர்கள் படித்த படிப்பும், பண்டிதரென பறை சாற்றும் தன்மையும் அறிவின் ஆராய்ச்சியும் எங்கு போயிற்றோ?

தமிழ்நாட்டு மகா ஜனங்களே! குடி அரசு நேயர்களே!! சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!! "குடி அரசு" பத்திரிகையானது மற்ற பத்திரிகைபோன்று போலி வேடத்துடன் வியாபாரமுறையில் உண்மையை மறைத்து வயிற்றுப்பிழைப்புக்காக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையன்று! வீரத்துடனும் மனசாட்சிக்கு விரோதமில்லாமலும் கற்பனையும் வர்ணனையுமின்றி உள்ளதை உள்ளவாறே எளிய நடையில் எல்லாரும் இன்புற்றிருக்கவேண்டியே ஓய்வின்றி உழைத்து வருகிறது. உண்மைக்கு ஒருபோதும் அழிவுஇல்லை. எவ்வளவு எதிரிகள் தோன்றினாலும் என்னென்னவித மித்திரபேதம் செய்தாலும் புத்தகங்கள் எத்தனை அழகுபெற அச்சிட்டு எத்தனை வெளியிட்டாலும் சுயமரியாதை இயக்கத்தையோ அதன் உண்மைத்தலைவர்களையோ ஒருபோதும் அசைக்கமுடியாது என்பதை எட்டுணையும் ஐயமின்றி சொல்லுவேன்.

போலித்தலைவர்களையும், பத்திரிகைகளையும் கண்டு ஏமாந்து போகாமல் உண்மைக்கு உழைக்கும் பத்திரிகைகளை ஆதரித்து மேல் மேலும் சந்தாதாரராய்ச் சேருவீர்களென நம்புகிறேன். சுயமரியாதை இயக்கத்தின் உண்மையை உணராது எவரொருவர் குறை கூறுகிறாரோ அவர் முற்றும் பகுத்தறிவில்லாதவர் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். சுயமரியாதை ஓங்க!

குடி அரசு வாழ்க!! அறிவுச்சுடர் வீச!

தோன்றும். இக்கோவிலுக்குள் ஸ்ரீமதி மேயோ அம்மையை அழைத்துச் சென்று, அங்குள்ள காளிகா தேவியின் கொடூர சொரூபத்தையும், இதர "சில்லரைச் சாமிகளையும்" காட்டிக் கொடுத்தது ஒரு வங்காளப் பார்ப்பனர். பார்ப்பன அகராதியில் மேல்நாட்டார் "மிலேச்சர்" என எழுதப்பட்டிருந்தும், இம் மிலேச்ச மாதை கோவிலுக்குள் இப்பிராமணர் எங்ஙனம் அழைத்துச் சென்றார். சிதம்பர பார்ப்பனர் நந்தனாரை தீக்குளிக்கச் செய்தது போல், இவ்வங்காளப் பார்ப்பனர் இம்மாதையும் கோயிலுட் புகுமுன் தீக்குளிக்கச் செய்திருப்பாராகில் "இந்திய மாதா" வென்ற வசை புராணம் தோன்றியிராதல்லவா? நந்தனாரைப்போல் அம்மாது "இந்தியப் பாக்கள்" அல்லவா பாடிச் சென்றிருப்பர்.

ஒரு பார்ப்பனக் குருக்கள் ஒரு ஆட்டைப்பிடித்துக் கொண்டதும், மற்றொரு பார்ப்பனர் அதை ஒரே வெட்டில் இரண்டு துண்டாக்கினதும், இம்மாது அக்கோவிலில் கண்ணுற்ற ஒரு காட்சியாகும். இவ்விதமாக இந்தியாவெங்கும் உயிர்ப்பலிகள் சர்வ சாதாரணமாக நடக்கின்றதல்லவா? இதை யாரே மறுக்க வல்லவர். "வேத மறியாத, ஞானமில்லாத கீழ் மக்கள் இக்காரியம் செய்கின்றனர்" என ஒரு பார்ப்பனப் பண்டிதர் மறுப்புக் கூறினர். கல்கத்தாவி னருகிலுள்ள காளி கோவிலில் இப்பலியிடுபவர் வேதமறிந்த, ஞான முதிர்ந்த பார்ப்பனக் குருக்கள் தானே? "பண்டைக் காலத்தில் பார்ப்பனர் யாகத்தில் பலி கொடுத்தனர். இவ்விருபதாம் நூற்றாண்டில் இல்லை" என மற்றொரு பண்டிதர் எழுதியுள்ளார். சென்ற சில மாதங்கட்கு முன்னே திருவான்மியூரிலும் கும்பகோணத்திலும் பல ஆடுகளைப் பலியிட்டுக் கொன்றவர்கள் இவ்வேதப் பார்ப்பனர்கள் தானே! மிருகங்களைப் பலியிடுவதால் கடவுள் திருப்தியடைந்து வேண்டிய வரங்களைக் கொடுப்பார் என்ற எண்ணம் "இந்துக்கள்" மனத்தில் ஊன்றிக்கிடக்கிறது. நீங்கள் ஜனசங்கைக் கணக்கில் 22 கோடி "இந்துக்கள்" இந்தியாவிலிருப்பதாகக் காட்டிக்கொள்கிறீர்களே! இந்த 22 கோடியில் பலிகொடாத இந்துக்கள் எத்தனை பேருளர்? ஒரு புறம் ஜீவகாருண்யப் பிரசங்கம், மற்றொரு புறம் கொலை. அதுவும் ஆண்டவன் பேரால், ஆண்டவனை திருப்தி செய்யுமாறு கொலை. இம்சையும். அஹிம்சையும், இரண்டும் "இந்து" மதத்தின் பேரால் நடக்கும் போது இதைக் கண்ணுற்ற மேயோ எள்ளி நகையாடாமல் பின் என் செய்வார்! மக்கள் மேம்பட வேண்டுமானால் இப்பலிக் காதாரமாயுள்ள உங்கள் வேதங்கள் பொசுக்கப்பட வேண்டு மல்லவா?

## பிள்ளைவரம்

வெட்டிய ஆட்டின் இரத்தத்தை பிள்ளைவரம் வேண்டிவந்த ஒருமாது நாவினால் நக்கியதையும, மற்றொருத்தி இந்த ரத்தத்தை சீலையில் தோய்த்தெடுத்து அப்புறம் சென்றதையும் மேயோ கூறியிருக்கிறார். இதில் என்ன பொய் இருக்கின்றது. பிள்ளைவரத்துக்காக "இந்துக்களால்" செய்யப்படும் கோரிக்கைகளையும், வேண்டுதல்களையும் அறிந்தவர்கட்கு, இந்த இரத்தத்தை நக்கிய சம்பவம் மிகவும் சாதாரணமாகவே தோன்றும். கோயமுத்தூர் ஜில்லாவில் காரமடையென்ற ஊரில், ரங்கநாதர் கோவிலின் முன், மாசிமாதத்தில் நீங்கள் சென்று பாருங்கள். தாசர்கள் ஆடவும், அவர்கள் வாயில் வாழைப்பழத்தை பக்தர்கள் நுழைக்கவும், அவர்கள் அதை தங்கள் ஊத்தைவாயில் மெல்லவும், பிள்ளைவரம் வேண்டும் பெண்மணிகள் தங்கள் "முந்தானையை" யேந்தவும், அதில் தாசர் தம் வாயிலுள்ளதைத் துப்பவும் அம்மாது அதை எடுத்துக் "குடுக்கென்று" விழுங்குவதும், காண்பீர்கள். சேலம்ஜில்லாவில் மற்றொரு உற்சவகாலத்தில் மிகவும் ஆபாசமான, சொல்லத்தரமற்ற வேண்டுதலுமுண்டு. ஒருமுறை இரண்டுமுறை யென வேண்டிக்கொண்டு, சில குறிப்பிட்ட ஆபாசமான விக்ரகத்தில் பெண்கள் இடித்துக்கொள்ளுகிறார்கள். சில சமயங்களில் மறைவான பச்சைப்பந்தலடியில் உயிருள்ள விக்ரகங்களுக்கும் இப் "பூசை" நடப்பதுமுண்டு.

இதே சேலம்ஜில்லாவில் பிள்ளைகளை கொல்லுவதற்கும் ஒருசாமியுண்டு. யாராவது ஒருவர் சாகவேண்டுமானால் இக்கோவிலில் உயிரோடு ஒரு ஆடோ, கோழியோ தலைகீழாக தொங்கவிடப்பட்டு, அது செத்து, நாறிப்புழுத்து விழவைப்பார்கள். இவ்வளவும் இந்துமதத்தை கிரீடமாக அணிந்துள்ள மக்களின் மூடப்பழக்கமாகும். இப்பழக்கவழக்கத்திற்கு ஆதாரமாக உள்ளது உங்கள் கோவில்களும், சுவாமிகளுமாகும். மக்கள் மனம் தூய்மை பெற்று வாழவேண்டுமானால் இத்தகைய சுவாமிகளையும், கோவில்களையும் சுட்டுப் பொசுக்கவேண்டாமா?

## தீர்த்தவிசேடம்

காளிகோவிலில் மேயோவெனும் மாது கண்ட மற்றொரு காட்சி யென்னவெனில், காளிக்கு அபிஷேகமாகும் ஜலமும், மற்றதும் சாக்கடை வழியாக வெளியில் வந்து தொட்டியில் விழுந்து, புழுத்து நாறியிருக்கும் ஜல-திட பதார்த்தத்தை மக்கள் தீர்த்தம் தீர்த்தமென்று அள்ளிகுடித்ததாகும். இதுவென்ன பொய்யா? சாமியின் பேரால் இவ்வித விஷக்கிருமிகளும், மற்றதும் நிறைந்த சாக்கடை நீரை தலையில் தெளித்துக்கொள்வதிலும், கண்களைக்கழுவிக்கொள்வதிலும் குடிப்பதிலும் நமது மனம் லஜ்ஜை கொள்வதில்லை. என்னே நமது மதப்பற்று! சுத்தஜலமும், சுத்த ஆகாரமும் சாப்பிடும் சைவமக்கள் இப்புழுத்த மலத்தை நாடோறும் சிவக்ஷேத்திரங்களில் பருகுகின்றனரா இல்லையா? இதைச்சாப்பிடவைக்கும் மதத்தை வெட்டிப் புதைக்கவேண்டுவது அவசியமென உங்களுக்குத் தோன்றவில்லையா? இதைச் சாப்பிடுவது மதசம்மதமல்லவாயின் நாளையத்தினமே இவ்வழுக்கு கோயில் தொட்டிகளில் தேங்கவொட்டாமல்வெளிப்படுத்துங்கள். "இது தீர்த்தமல்ல அழுக்கு, இதைத்தொடுவது சுகக்கேடாகும்" என்று விளம்பரமெழுதி யொட்டி மக்களின் மனத்தைத் திருப்ப முயற்சியுங்கள். இல்லையேல் அவ்வழுகிய நீரைப்போல் உங்கள் சாமியும், கோவிலும் விரைவில் அழுகிப்புழுத்துவிடும்.

## சுயமரியாதை சடங்குகள்

ஈரோடு, டவுனில் சைகில் கடை வைத்திருக்கும் E. L. ரத்தின முதலியாரவர்கள் இறந்துபோன தம்தமையனாரின் உத்திரகிரியை 6-9-28-ம் தேதி பார்ப்பன புரோகிதத்தை ஒழித்து சுற்றத்தார்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தளித்து முடித்தார்.

இவ்வாரம் இவ்வூரில் பல திருமணங்களும் பார்ப்பனீயமின்றியே நடைபெற்றன. இதில் செங்குந்த மரபினர்தான் முற்றிலும் பார்ப்பனீயத்தையும் புரோகிதத்தையும் ஒழித்தவர்கள் ஆவார்கள். ஒரு நிருபர்

அலகப்பாளையம்.

சென்ற 10-9-28 தேதி திங்கள்கிழமை குடி அரசுச் சந்தாதாரரும் பிரசாரகருமான திம்மனூர் திரு. வெங்கட்டராம கௌண்டர் குமாரர் வீரப்ப கௌண்டர் அவர்களுக்கும் அலகப்பாளையம் திரு ரங்கப்பகவுண்டர் குமாரத்திக்கும் பார்ப்பனப் புரோகிதத்தையும் பல மூட சடங்குகளையும் நீக்கி பந்துமித்திரர்களைக்கொண்டு திருமணம் நடத்தப்பட்டது. ஏழைகளுக்கும் உணவளிக்கப்பட்டது.

கோவில்பட்டி தாலூக்கா மேலமாந்தை ஜமீன் ஷண்முகபுரத்தில் சென்ற ஆவணித் திங்கள் 27-உ திருவாளர்கள் பெரியசுப்பக் கவுண்டர், சின்னசுப்பக் கவுண்டர் ஆகிய இரு சகோதரர்களுக்கும், ஷெயூர் திரு கந்தசாமிக் கவுண்டர் அருமைப் புதல்வியர்கள் பெரியகொண்டம்மாள், சுப்பம்மாள், சின்னக்கொண்டம்மாள் ஆகிய மூவருக்கும் வெகு சுண்ணியமாகவும் ஆடம்பரமில்லாமலும் ஷெயூர் கர்ணம் திருவாளர்கள் எஸ் முத்தபிஷேகம்பிள்ளை ச, அருணாசலசெட்டியார் இவர்களுடைய பெருமுயற்சியினால் பிராமணீயமொழிக்க திருமணம் நிறைவேறிற்று. எஸ். முத்தபிஷேகம்பிள்ளை

கூடலூர், திரு. பா. பெருமாள் அவர்கள் சிறிய தகப்பனார் குமாரத்தி துளசி அம்மாள் 3—9—28-ல் காலஞ்சென்றதை முன்னிட்டு 12—9—28-ல் பிராமண புரோகிதமின்றி கருமகாரியம் முடித்து பந்துக்களுடன் ஏழைகளுக்கு அன்னமளித்தார்.

ரங்கோனைச்சேர்ந்த பகோ, வீருச்சாமிக்கள்ளர் அவர்கள் மனைவி இறந்துற்ற பதினாறும்நாள் 6—9—28 தேதி வியாழக்கிழமை கல்சடங்கு விழா வினை பார்ப்பனரின்றி பெரியோர்களைக்கொண்டு சுயமரியாதை முறையில் நடத்தினார்கள்.

ரங்கோன்வெள்ளைக்கோட்டைத்தெருவில் வசிக்கும் திரு. சங்கரலிங்கம் பிள்ளை (உபாத்தியாயர்) அவர்கள் தமது தகப்பனாரின் திதியைபார்ப்பனீயமன்றி நடத்தி பார்ப்பனருக்கு கொடுப்பதை நிறுத்தி ஏழைகளுக்கு அன்னமிட்டார். சிவசுப்பிரமணியன்.

நாகப்பட்டணம் தாலூகா கிவளூரில் ஆர். சவுரிராஜ நாயுடு தமது அன்னையாரின் திதியை நிகழும் விபவ-ளு புரட்டாசி-மீ 4-உ யன்று பார்ப்பனரைக் கொண்டு எவ்வித் கிரிகைகளும் செய்யாமல் புரோகிதத்தை அறவே ஒழித்து பல அன்பர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து சிறப்புற நிகழ்த்தினார். "ஒரு நிருபர்"

## உலக நூதனம்.

"நியூஸ் ஆப் தி ஒர்ல்டு" என்னும் பத்திரிகையின் ஓர் இதழை அச்சடிப்பதற்கு 50 டன் காகிதம் செலவாகிறதாம்.

... ... ... ...

அமெரிக்காவில் கலிபோர்னியா என்ற கபிலாரண்ய நாட்டுக் காடுகளில் 376 அடி உயரமும், 34 அடி பருமனுமுள்ள வானளாவிய பெரு மரங்கள் மிகுதியாம்.

... ... ... ...

இதுவரை மிக அதிக வேகமாக மோட்டார் வண்டி ஓட்டப்பட்டிருப்பது மணி 1-க்கு 207. 5 மைல்களாகும். ஆனால், ஆகாய விமானம் 318. 8 மைல் வீதம் செலுத்தப்பட்டிருக்கிறது.

... ... ... ...

கம்பியில்லாத் தந்தி மூலமாய்த் தங்கம் வெள்ளி, பிளாட்டினம் முதலிய உயர்ந்த பொருள்கள் இருக்குமிடத்தை எளிதில் கண்டுபிடிக்கும் முறை ஒரு கத்தோலிக் பாதிரியால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

... ... ... ...

காட்டுமிருகங்களைக் கொல்லாமல் மயக்கமடையும்படி செய்துபிடிப்பதற்காகக் கேப்டன் ஹாரிஸ் என்பவர் ஒருவித துப்பாக்கிகுண்டுகள் உபயோகப்படுத்துகிறாராம். அந்தக் குண்டுகளின் முனையில் விஷ ஊசிகள் செருகப்பட்டிருக்கின்றனவாம்,

... ... ... ...

சமுத்திரங்களிலெல்லாம் மொத்தம் எவ்வளவு தண்ணீரிருக்கிறதோ அதில் மூன்றிலொரு பாகம் தண்ணீர் பூமிக்குள்ளு மிருப்பதாக ஒரு ரசாயன சாஸ்திரி கூறுகிறார். பூமிக்குள் 6 மைல் வரையில் கூட தண்ணீரிருப்பதாகவும், நகரங்களில் பூமிக்குள் ஏற்படுத்தியிருக்கும் சாக்கடைகளைப் போன்றே கீழேயும் ஜலம் ஓடிக்கொண்டேயிருப்பதாகவும் அவர் கூறுகிறார்.

... ... ... ...

தீரா வியாதிக்காரர்கள் வலியில்லாமல் சாகிறதற்காக செக்கோஸ்லா வேக்கியநாட்டுப் புதிய குற்றச்சட்டத்தில் விதிகள் ஏற்பட்டுள்ளன. அப்படி எந்த நோயாளியாவது தற்கொலை செய்துகொள்ள விரும்பினால் இரண்டு டாக்டர்கள் சிபார்சு செய்த பிறகுதான் அப்படிப்பட்ட மரணத்துக்கு சர்க்கார் உத்திரவு கொடுக்கப்படும். தற்கொலை செய்ய உதவி செய்தவர்கள்மீது குற்றம் சாட்டப்படமாட்டாது. இப்படி புதிய சட்டங்கள் தயாரித்திருப்பதாக செக்கோஸ்லாவ் பத்திரிகை கூறுகிறது. மேலும் பிள்ளை பெறுவது தாயின் உயிருக்கு அபாயகரமாயிருந்தால், அல்லது ஏற்கனவே மூன்று பிள்ளைகளிருந்தால், அல்லது அந்த குடும்பத்துக்கு ஒரு பிள்ளையை சம்ரட்சிக்க வழியில்லாமலிருந்தால் இந்தக் காரணங்களுக்காக கர்ப்பத்திலுள்ள பிள்ளையை ஆபரேஷன் செய்து எடுத்துவிடலாமென்றும் சட்டத்தில் விதி ஏற்பட்டிருக்கிறது. தீராத வியாதியுள்ள காரணத்துக்காக விவாகத்தை ரத்துசெய்து கொள்ளலாமென்றும் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### திருவாளர்கள் சாமி சிதம்பரனார் S. V. லிங்கம்அவர்களின் ஈரோடு விஜயம்.

திருவாரூர் தமிழாசிரியரும் "குடி அரசு" "திராவிடன்" பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கட்டுரைகள் வெளியிட்டு வருபவருமான சாமி. சிதம்பரனார் அவர்களும், சுயமரியாதைப் பிரசாரகர் திரு. S. V. லிங்கம் அவர்களும் இவ்வூருக்கு விஜயம் செய்து 19-9-28ல் காந்தி சௌக்கிலும் 20-9-28ல் அலி சௌக்கிலும் சமூக சீர்திருத்தத்தைப் பற்றியும் தற்கால ராஜீய நிலைமையைப் பற்றியும் முறையே பென்ஷன் தாசில்தார் திரு. வெங்கட்ட பெருமாள் நாயுடு பி. ஏ. அவர்கள் தலைமையிலும், "விஸ்வநேசன்" பத்திராதிபர் திரு. சுப்பண்ண ஆச்சாரி அவர்கள் தலைமையிலும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

சாமி சிதம்பரனார் அவர்கள் திருக்குறள் தொல்காப்பியம் முதலியவைகளிலிருந்தும் பெரிய புராணம், பாரதம், இராமாயணம் முதலியவைகளிலிருந்தும் பல மேற்கோள்கள் எடுத்துக்காட்டி அவைகளில் காணப்படும் தமிழர், ஆரியர் இவர்களின் நாகரீகங்களைப் பற்றியும் அநாகரீகங்களைப் பற்றியும் மூடநம்பிக்கைகளைப் பற்றியும் புரட்டுகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துச் சொன்னார்.


மாயவரம் S. V. லிங்கம் அவர்கள் "தற்கால ராஜீய நிலைமை"யில் சைமன் கமிஷன் பகிஷ்கார கூட்டத்தினரதும் காங்கிரஸ் கூட்டத்தினரதும், பார்ப்பனீயத்தினதும் புரட்டுகளையும், தொழிலாளர்களின் பரிதாப நிலைமையும் விரிவாக எடுத்துச் சொல்ல கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின. தீர்மானங்கள்.

1. கட்டளை ஸ்டேஷனுக்கருகில் தண்டவாளத்தை எடுக்க எத்தனித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஞானப்பிரகாசம் என்றவருக்குமிகக் கொடுமையான பத்துவருட தண்டனையை அளித்த நீதிமுறையை இம்மகாநாடு பலமாக கண்டிக்கின்றது.

2. திருச்சி ரயில்வே கலவரவழக்கு சம்மந்தமாக உள்ள ரயில்வேதொழிலாள தலைவர்களை விசாரணைக்கு அழைத்துவரும்போது போலீசார் மிருகத்தனமாய் நடந்து கொண்டதை கண்டிப்பதுடன் மேல் அதிகாரிகளை அதற்குத்தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறும் இம்மகாநாடு சர்க்காருக்கு வலியுறுத்துகின்றது. ஒரு நிருபர்.

---

எஸ்ஸெக்ஸ் என்னுமிடத்தில் சுண்டெலிப் பண்ணை ஒன்றிருக்கிறது. இதில் 50,000 சுண்டெலிகள் மிகவும் கவலையுடன் வளர்க்கப்பட்டு வருகின்றனவாம். வெள்ளி போன்ற பளபளப்பான நிறம், எலுமிச்சம்பழநிறம், சுத்த வெள்ளை நிறம் முதலிய பலவகை நிறங்களுள்ள எலிகள் அங்கே [illegible]ருகின்றனவாம். பிளவைநோய் சம்பந்தமாகவும், யுத்தங்களில் உபயோகப்படுத்தப்படும் விஷப்புகை சம்மந்தமாகவும் விஞ்ஞானப்புலவர்கள் செய்துவரும் ஆராய்ச்சிகளுக்கு இவை உபயோகமாகின்றனவாம். வே. உ.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ௵ புரட்டாசி௴ 8௳

# இளம் வயது விவாக விலக்கு மசோதா

## தேசீய வாதிகள் யோக்கியதை.

மக்கள் இளம் வயதில், அதாவது தக்க வயதும் அறிவும் உணர்ச்சியும் இல்லாத காலத்தில் விவாகம் செய்யப்பட்டு வருவதால் மக்கள் சமூகவளர்ச்சிக்கும் உரத்திற்கும் கேடாயிருந்து வருகிறது என்கின்ற உண்மையை நமதுவாழ்வில் தினமும் அனுபவத்தில் கண்டுவருவதோடு அவற்றைதடுக்கவேண்டுமென்பதாகவும் முயற்சி எடுத்தும் வருகின்றோம்.

இதைப்பற்றி பல சமூகமகாநாடுகளிலும் பல சீர்திருத்த மகாநாடுகளிலும் பேசி தீர்மானங்களும் செய்து வந்திருக்கின்றோம். ஆனால் அதை அனுசரித்து அது அமுலில் வரத்தக்க ஏற்பாடுகள் ஏதாவது செய்ய ஆரம்பித்தால் உடனே அங்கு மதம் வந்து குறுக்கே விழுந்து அம்முயற்சிகளை அழிப்பது வழக்கமாகவே இருந்து வந்திருக்கின்றதும் நாம் அறிவோம். இதன் காரணமாகவே பெரிதும் நாம் மனித இயற்கைக்கு விரோதமான மதங்களும் கண்மூடிக் கொள்கைகளும் மண் மூடிப் போகவேண்டுமென்று முயற்சித்து வருகின்றோம். இம்முயற்சிக்கு யார் எதிரிடையாக இருந்த போதிலும் நாம் ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யாமல் இடையூறான மதங்களையும் அதற்கு ஆதாரமான சாமிகளையும்கூட ஒழித்தாகவேண்டும்என்றும் சொல்லுகின்றோம். சமீபகாலத்தில்சென்னை சட்டசபையில் இதுவிஷயமாய் சட்டம் செய்வதைப்பற்றி வாதம் நடைபெற்ற சமயத்தில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியைச் சேர்ந்த மாஜி மந்திரி சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் சற்று மாறுதலாய் பேசியதற்காக அவரை, ‘பார்ப்பனரல்லாதார்கக்ஷி ஸ்தானத்தை ராஜினாமா கொடுத்துவிட்டு பார்ப்பனர் கக்ஷிக்கு போய்விட வேண்டு’ மென்று கூட எழுதியிருக்கிறோம். அவரை ‘இனி பார்ப்பனரல்லாதார் கக்ஷியைச் சேர்ந்தவர் என்று சொல்வது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே அவமானம்’ என்று கூட எழுதி இருந்தது வாசகர்களுக்குத்தெரியும். இங்கிலையில் சென்ற வாரம் இந்தியா சட்டசபையில் இம்மசோதா விவாதத்திற்கு வந்த போது தமிழ் நாட்டுபார்ப்பனர்கள்பெரிதும்இம்மசோதாவிற்கு விரோதமாய்ப் பேசியிருப்பதாகவும், பலர் தனி விண்ணப்பம் கொடுத்திருப்பதாகவும், அதில் சில மாமதிய அங்கத்தவர்களும் கையொப்ப மிட்டிருப்பதாகவும் தெரியவருவதுடன் பல சங்கராச்சாரிகளும் சாஸ்திரிகளும் ‘ராமராஜ்யம்’ நடத்தும் மகா ராஜாக்களும் இம்மசோதாவுக்கு விரோதமாய் அரசப் பிரதிநிதியிடம் தூது போனதாகவும் தெரிய வருகின்றது.

இந்த வருணாச்சிரமக்காரரோடு சில்மகமதியர்களும் சேர்ந்து கொண்டதானது அச்சமூகத்திற்கே அவமானத்தை விளைவித்த காரியமென்பதோடு மனிதசமூக உரிமைக்கே கேடு விளைவித்ததாகுமென்றே கருதுகிறோம். அவர்களைப்பற்றிய மற்ற விஷயங்களையும், அதில் இவர் பார்ப்பனர்களுக்கு அடிமையாய்இருந்து வாழவேண்டிய அவசியத்தில் இருக்கிற விஷயங்களையும், வெளிப்படுத்தவும் அவர்களைக் கண்டிக்கவும் அனகாரியங்களை அச் சமூகத்தலைவர்களுக்கும் அச்சமூக பத்திரிகைகளுக்குமே விட்டுவிட்டு நமது பிரதிநிதி என்னும் உரிமையின்பேரால் நடந்து கொண்டவர்களைப் பற்றி சற்று விசாரிப்போம்.

இதுவிஷயமாய் இந்திய சட்டசபையில் நடந்த முழுவிபரத்தையும் எழுத நமக்கு போதிய இடமில்லாவிட்டாலும் அம்மசோதாவிற்கு விரோதமாய்பேசிய தமிழ்நாட்டுப் பிரதிநிதியும் இந்துமத வருணாசிரமப் பிரதிநிதியும் ஆகிய திரு. எம். கே. ஆச்சாரியார் அவர்களின் போக்கை சற்றுகவனிப்போம்.

திரு. ஆச்சாரியார் அவர்கள் இச்சட்டத்தை எதிர்த்துப்பேசுகையில் “பால்யவிவாகமில்லாவிட்டால்உண்மையான கற்புஎன்பது சாத்தியமில்லை” என்றும் “பெண்களின் வாழ்க்கை நாசமடைந்துவிடும்”என்றும் குடும்ப வாழ்க்கை துக்கமயமாகி சதா ஆபத்திற்குள்ளாகி இருக்கும்” என்றும் “புருஷர்களுக்கு சிறைதண்டனை அளித்துவிடுவதால் பெண்கள் நடத்தையும் அதிகேவலமாக மாறிவிடும்” என்றும் “பாலியவிவாகம் இருந்தாலொழிய வாழ்க்கையில் உண்மையான ஒழுக்கம் ஏற்படுவது அசாத்தியம்” என்றும் பேசி இருக்கின்றதாக தெரியவருகிறது. இவைகள் (சு- மி- த. நா.) பத்திரிகைகளில் காணப்படுகின்றதுடன் சுதேசமித்திரன் நிருபரும் திரு. ஆச்சாரியாரை ஆதரித்தும் புகழ்ந்தும் எழுதி இருக்கின்றார்.

பாலிய விவாகமில்லாவிட்டால் பெண்கள் கற்பு கெட்டுப்போகும் என்றுசொல்வதும் வாழ்க்கையில் துக்கம் ஏற்படும் என்றுசொல்வதும் எவ்வளவு மனந்துணிந்து சொன்ன அயோக்கியத்தனமான வார்த்தைகளாகும் என்பதை வாசகர்கள்தான் யோசித்துப்பார்க்கவேண்டும். இதுபார்ப்பனர்களுக்காகஎன்றோ அல்லது அய்யங்கார் கூட்டத்திற்காக என்றோ திருவாளர் ஆச்சாரியார் பேசி இருப்பாரானால் நமக்கு அதைப்பற்றி அவ்வளவு கவலை இல்லை. ஆனால் நம்மெல்லோருக்குமே பிரதிநிதி என்கின்ற முறையில் பேசியிருப்பதால் நாம் அதைக் கண்டிக்காமல்இருக்க முடியவில்லை. நம்மில் அநேகர்கள் இதுவரை பெண்களை சுமார் இருபது வயதுவரை கூட வைத்திருந்து விவாகம் செய்து கொடுத்திருக்கின்றார்கள் என்பதும், இப்போது தான் வரவர பார்ப்பனீயத்திற்கு அடிமைப்பட்டு பார்ப்பனர்களைப் பார்த்து காப்பியடித்து தாங்களும் உயர்ந்த ஜாதிக்காரர் என மதிக்கப்படவேண்டும் என்கின்ற ஆசையில் பலர் சிறு பிராயத்திலேயே கலியாணம் செய்து விடுகின்றார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. திரு ஆச்சாரியாரின் வாக்கு மூலப் படிக்குப் பார்த்தால் பக்குவமான பின்னே பக்குவமாகி 2 வருஷம் 4 வருஷம் பொறுத்தோ விவாகம் செய்யப்பட்ட பெண்கள் கற்பில்லாமல் விபசாரிகளான பிறகு தான் விவாகம் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகஏற்படுகிறது. திரு. ஆச்சாரியார், ஒருசமயம் தாம்மற்றவர்களைப்பற்றியப்படிச் சொல்லவில்லை யென்றும் தம்முடைய சமூகத்தைப்பற்றித்தான் தாம் சொன்னதாகச் சொல்வாரானால், தம் சமூகத்துப் பெண்களும் பக்குவமடைந்துவிட்டால் அவர்கள் கல்யாணமில்லாமல் கற்புடனிருக்க முடியாதென்று கருதிச் சொன்னவராகவேநினைக்கவேண்டியிருக்கிறது. இதனால் அவர்எப்படியும் பெண்கள்சமூகத்தையே இழிவு படுத்தியதாகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. ஆச்சாரியார் இப்படிச் சொல்ல நேர்ந்தது அந்தப்பார்ப்பனீயத் தன்மையே யொழிய வேறல்ல. ஏனெனில் பார்ப்பனீயத் தன்மையான இந்து மதம் என்பதில் பெண்கள் காவலில்லாமல் கற்புடனிருக்கமுடியாதென்றேசொல்லப்படுகிறது. உதாரணமாக இந்துக்கள் என்பவர்கள் கல்யாண காலத்தில் கல்யாணப் பெண்களுக்கு கற்புக்கு உதாரணமாகக் காட்டி உறுதி வாங்க வழங்கும் மகா பதிவிரதையென்று சொல்லப்படும் அருந்ததி என்னும் ‘உத்தமஸ்திரீ’யின் யோக்கியதையைப் பார்த்தால் மற்ற பெண்களுடைய நிலைமை தானாகவே விளங்கும். அதாவது ஒருசத்தியம்சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் அருந்ததி சொல்வதாவது.—

“ஸ்திரீகளுக்கு மறைவான இடமும் புருஷர்களின்சந்திப்பும் கிடைக்கும் வரையில் தான் ஸ்திரீகள் பதிவிரதைகளாயிருக்கமுடியுமாதலால் பெண்களை வெகு ஜாக்கிரதையாகக் காவல் காக்க வேண்டும்”

என்பதாக தேவர்களிடத்தில் சொல்லி சத்தியத்தைக் காப்பாற்றினதாக இந்து மதம்—அதிலும் சைவர்களுக்கு ஆதாரமான மகாசிவபுராணம் சொல்லுகிறது. இதற்கு ஆதாரமாக மற்றொரு இடத்திலும், அதாவது திரௌபதையும அருந்ததி சொன்னதையேதான் சொல்லி சத்தியத்தை நிரூபித்ததாகவும் சொல்லப் பட்டிருக்கிறது, அதாவது:—

“ஆண்கள் இல்லா திருந்தாலொழிய பெண்கள் கற்புடையவர்களாக இருக்க முடியாது”

என்பதாக பாரதத்தில் இதைப் பற்றிச் சொல்லும்போது "வசிஷ்டர் நல்லற மனைவியை அனையாள்" அதாவது அருந்ததிக் கோப்பானவள் சொன்னாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கொள்கைகளையுடைய இந்த இந்துமதப் பிரதிநிதியிடம் அதிலும் வருணாசிரமதர்மியிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும். இதே யோக்கியர்தான் மூன்று வருஷத்திற்கு முன் திருச்சியில் கூடிய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் "ஒரு பார்ப்பனரல்லாத பையனுடன் ஒரு பார்ப்பனப்பையன் ஒரு வேளை சாப்பிட்டால் ஒரு மாதம் பட்டினியிருப்பேன்" என்று சொன்னவர், இப்படிச் சொன்னபிறகுதான் செங்கல்பட்டு வடஆற்காடு தென்னாற்காடு ஜில்லாக்களின் பிரதிநிதியாக அச்ஜில்லா வாசிகள் அவரை இந்தியா சட்டசபைக்கு அனுப்பினார்கள். இவருடைய தேர்தலுக்காகத்தான் பார்ப்பனரல்லாத தேசிய வாதிகள் காங்கிரஸ் காரர்கள், என்பவர்கள் தொண்டைகிழியப் பிரசாரம் செய்தார்கள்.

எனவே இதிலிருந்தே நம் நாட்டு ஓட்டர்களின் யோக்கியதையையும் தேசியவாதிகளின் யோக்கியதையையும் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

தவிர, இப்படிப்பட்ட ஆசாமிகளையும் இவர்களுக்கு ஆதாரமாயுள்ள மதங்களையும், இவர்களை இந்திய சட்டசபைக்கு அனுப்பிய காங்கிரஸையும் காப்பாற்றிக்கொண்டிருக்கும் யோக்கியர்கள்தான் மிஸ் மேயோவைக் குற்றஞ் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள் என்பதை வாசகர்களே தெரிந்துகொள்வார்களாக.

இனி, திரு. ஆச்சாரியார் சொன்ன மற்றொரு விஷயத்தைப் பற்றிக் கவனிப்போம். அதாவது பால்ய விவாகம் செய்யாவிட்டால் குடும்ப வாழ்க்கையில் துக்கம் ஏற்படுமென்கிறார்.

என்ன துக்கமேற்படுமென்பது நமக்கு விளங்கவில்லை. அதைப்பற்றி விரிக்க நமக்கு வெட்கமாயிருக்கிறது. அன்றியும் புருஷர்கள் சிறைக்குப் போய்விட்டால் பெண்களின் நடத்தை கேவலமாய் விடுமென்றும் சொல்லுகிறார். இவை எவ்வளவு தூரம் பெண்களை இழிவு படுத்துவதாகிறது. இந்து மதமும் வேதமும், புராணமும், வைதீகமும், வருணாசிரமமும் பெண்களை அடிமைப்படுத்துவதையும் கேவலப்படுத்துவதையும் அஸ்திவாரமாகக் கொண்டதாதலால் இம்மாதிரியான வார்த்தைகள் நமது இந்திய சட்டசபைப் பிரதிநிதிகளிடத்திலிருந்து வருவது ஒரு அதிசயமல்ல.

உதாரணமாக கடவுளுடைய அவதாரமென்று சொல்லப்படும் ராமனை, கடவுள் பெண் சாதியின் அவதாரமென்று சொல்லப்படும் சீதையின் கற்பில் சந்தேகப்பட்டு அவள் நெருப்பில் பொசுக்கப்படவும் பூமியில் புதைக்கப்படவும் செய்ததிலிருந்தும், அந்தசீதையும் ஒரு சமயத்தில் புருஷனைவிட்டுப் பிரியும்போது "இதோபார் நான் இப்பொழுதே கர்ப்பமாயிருக்கிறேன்," என்றும் "இது புருஷனிடத்திலேயே உண்டான கர்ப்பம்" என்றும் வயிற்றைத் திறந்து காட்டியதோடு, தான் கொஞ்சகாலம் புருஷனைவிட்டு நீங்கி இருக்க நேருவதாலேயே தான் விபசாரத்தனம் செய்து கர்ப்பந் தரித்துவிட்டதாக தன் புருஷன் கருதக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டிருப்பதிலிருந்தும் (வால்மீகி ராமாயணம்) திரு. ஆச்சாரியார் மற்றபெண்கள் புருஷனைவிட்டு நீங்கியிருந்தால் ஒழுக்கம் கெட்டு விடுவார்கள் என்று சொல்வதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

ஆனால் இவைகள் மனிதத்தன்மைக்கு ஏற்றதான வார்த்தைகளாகுமா என்றும் நமது பெண் சகோதரிகளுக்கு நியாயம் செய்ததாகுமா என்றும் கேட்கின்றோம். இதைக் கேட்ட அன்னிய நாட்டார்கள் என்ன நினைப்பார்கள். எனவே நமது மக்களின் முன்னேற்றத்திற்கும் மனித தன்மைக்கும் ஏற்றதான சீர்திருத்தங்கள் செய்யப் புறப்படும் போதெல்லாம் இப்படி ஒரு கூட்டத்தார் இருந்துகொண்டு நம்மை இழிவுபடுத்தி முட்டுக்கட்டை போட்டுக் கொண்டு வருவதை இனி எத்தனை காலத்திற்குத்தான் நாம் பொறுத்துக் கொண்டிருப்பது என்பது நமக்கு விளங்கவில்லை. இவை இப்படியிருக்க இவ்விஷயங்களில் ஒரு சிறிதும் கவலை எடுத்துக்கொள்ளாமல் தேசத்தின் பேராலும், சாமியின் பேராலும், சமயத்தின் பேராலும், சமயாச்சாரியாரின் பேராலும், புராணங்களின் பேராலும் உலகத்திற்கு நன்மையைச் செய்கிறவர்களைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்து வருகிறவர்களைப் பார்க்கும்போது திரு. ஆச்சாரியாரைவிட இக்கூட்டத்தார்களே அதிகமான அயோக்கியர்களும் கொடுமைக்காரர்களும் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு எதிரிகளுமாவார்கள் என்பதே நமது துணிபு.

ஆதலால் பொது மக்கள் இதிலிருந்தாவது அறிவு பெற்று தேசியமென்றும், சைமன் பகிஷ்காரமென்றும், சமயப்பாதுகாப்பென்றும், தேசியத் திட்டமென்றும், பூர்ண சுதந்தரமென்றும் சொல்லிக்கொண்டு திரியும் சுயநலவீணர்களின் வலையில் சிக்கி ஏமாந்து போகாமல் உண்மையான சீர்திருத்தத்திற்கும் சுயமரியாதைக்கும் ஏற்ற கொள்கைகளில் ஈடுபட்டு அரசியலையும் சமூக இயலையும் கைப்பற்றி அதைத் தக்க வழியில் திருப்ப வேண்டியது அவசியமென்று மற்றுமொரு முறை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## வருந்துகின்றோம்.

தஞ்சை ஜில்லாப் பெரியாரும், தஞ்சை ஜில்லா மிராசுதார்களின் நலத்திற்காக உழைத்தவரும் ஒரு காலம் தஞ்சை முனிசிபல் சேர்மனாக இருந்தவரும் தஞ்சை வாசிகளுக்கு பல நன்மைகள் செய்தவரும், தஞ்சையிலுள்ள பல பொதுநல ஸ்தாபனங்களை ஏற்படுத்தியவரும், சமஸ்கிருதம் தமிழ் ஆங்கிலம் முதலிய மொழிகளில் பாண்டித்யம் பெற்று ஆராய்ச்சி செய்தவரும், தூய வாழ்க்கை நடத்துதலே நீடித்த ஆயுளுக்கும் உடல் வலிவுக்கும் ஆதாரமென்றுணர்ந்து கடைசி வரை வாழ்க்கை நடத்தி வந்தவருமான ராவ் பகதூர் ஸ்ரீனிவாசம் பிள்ளையவர்கள் 14-9-28-ல் தஞ்சையில் தமது பங்களாவில் தம் 77 ஆம் வயதில் காலஞ்சென்றதை அறிந்து வருந்துகிறோம்.

இத்தகைய பெரியாரான ஸ்ரீ பிள்ளையவர்களின் குமாரர்களான திருவாளர்கள் கல்யாண சுந்தரம் பிள்ளையவர்களுக்கும் அவரது குடும்பத்தினர்களுக்கும் எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## அந்தோ!

### உயர்திருவாளர் கிஞ்சப்ப கவுண்டர் வெட்டுண்டு மாண்டார்.

நமது ஆருயிர் நண்பரும் சுயமரியாதை இயக்கத்திற்கு உற்ற துணைவருமாயிருந்த செல்வர் திரு. புளியம்பட்டி கிஞ்சப்பகவுண்டர் அவர்கள் 21 தேதி பகல் பத்துமணிக்கு அவரது வீட்டிற்குள்ளாகவே ஒளிந்துகொண்டிருந்த இருமூர்க்கர்களால் தலைவெட்டுப்பட்டு உடனே மாண்டுவிட்டார் என்னும் செய்திகிடைத்து மிகவும் வருந்துகின்றோம். திரு. கிஞ்சப்பகவுண்டர் ஒத்துழையாமை காலத்தில் திரு நாயக்கருக்கு உற்ற துணைவராயிருந்து கோபிதாலூகாவில் கதர்பிரசாரமும் மதுவிலக்கு தீண்டாமைவிலக்கு பிரசாரமும் செய்துவந்தவர். கோபி மகாநாட்டிற்கு வரவேற்பு அக்கிராசனராயிருந்தவர். கோபியில் கதர் டிப்போ ஏற்படுத்தவும் கதர் உற்பத்தி செய்யவும் மிகவும் பாடுபட்டு இப்போதும் ஒரு கதர் டிப்போ நடத்திவருகிறவர். சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது முதல் இதில் ஈடுபட்டு உழைத்துவந்ததுடன் தமது வகுப்புப் பிள்ளைகளின் கல்விக்காக காரமடையில் ஒரு ஆஸ்டல் ஏற்படுத்தி அதற்கு ரூ 100, 200, 300, வீதம் செலவு செய்து வந்தவர். மற்றும் ஏழைப்பிள்ளைகளுக்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த திட்டம் போட்டுக்கொண்டிருந்தவர். சுயமரியாதைப் பிரசாரக் கமிட்டியின் ஒரு அங்கத்தினராக இருக்க முன் வந்ததுடன் அக்கமிட்டி வேலை செய்யத் தொடங்கும் முதல் தினத்திலேயே அக்கமிட்டிக்கு ரூபாய் 25000 க்குக் குறையாமல் ரொக்கமாக அக் கமிட்டியின் பேரால் பாங்கியில் போட முடிவு செய்துகொண்டு அத்திருவிழாவை திரு. பனகால் அரசர் தலைமையில் திரு. ஆர். கே. சண்முகம் செட்டியாரால் திறக்கப்படவேண்டுமென்று கேட்டு இருவர் சம்மதமும் பெற்று திரு. செட்டியார் டில்லியிலிருந்து வந்தவுடன் திருவிழா நடத்த இருந்தவர். திராவிடனையும் சொந்தத்தில் வாங்கி நடத்தச்சென்ற மாதம் சென்னைக்குப்போய் 4, 5 நாள் "திராவிடன்" ஆபீசில் இருந்து எல்லா விபரமும் தெரிந்து வந்தவர். சுமார் ஒரு லட்ச ரூபாய்கள் ரொக்கமாகவும் மற்றும் லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பூஸ்திதியுமுடையவர். தமது வாழ்நாள் முழுவதையும் இவ் வியக்கத்திற்கே அர்ப்பணம் செய்ய முடிவு கட்டிக் கொண்டிருந்தவர். இந்நிலையில் அவர் திடீரென எதிரிகளின் சூழ்ச்சியால் இக்கெதிக்கு ஆளானார் என்று கேட்க மிக்க வருந்துகிறோம்.

## தர்மத்தம்பட்டியில் மதுரை ஜில்லா முதலாவது பார்க்கவகுல மகாநாடு.

மகாநாட்டை திறந்து வைத்தவர்.

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

தலைவர்:- திரு. ம. ரா. குமாரசாமியார்.

2000 பேருக்கு மேற்பட்ட ஜனக்கூட்டம்.

மதுரை ஜில்லா முதலாவது பார்க்கவகுல மகாநாடு இம்மாதம் 17, 18, தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது. வெளியிடங்களிலிருந்து திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், பட்டிவீரன்பட்டி சவுந்திரபாண்டிய நாடார், பெரியதம்பி நாடார், அய்யம்பாளையம் அழகுசுந்தரம் பிள்ளை, உசன்மீரா ராவுத்தர், ம. ரா. குமாரசாமி உடையார், சாமி சிதம்பரனார், முத்துக்குமார உடையார், எஸ். வி. லிங்கம், தங்கவேலு உடையார், ப. நாராயணசாமி உடையார், குழந்தைவேலு உடையார், மேல்குரிச்சி வே. துரைசாமி உடையார், மாரண்டஹள்ளி ஜமீன்தார், பார்க்கவ பந்து வெங்கிடாசல உடையார் முதலிய அனேக கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

திரு. நாயக்கரும் மற்றும் பல கனவான்களும் 17-உ காலை திண்டுக்கல் ஸ்டேஷனில் போட் மெயிலில் பெருங் கூட்டத்தினரால் வரவேற்கப்பட்டு ஸ்பெஷல் மோட்டாரில் நேரே தர்மத்தம்பட்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு சாப்பாடு முடிந்தவுடன் பகல் மூன்று மணிக்கு தலைவர் திரு. ம. ரா. குமாரசாமி அவர்களும், திரு நாயக்கரும் மேள வாத்தியங்களுடன் சுமார் 500 பேர்களுடன் ஊர்வலமாக மகாநாட்டுக் கொட்டகைக்கு அழைத்து செல்லப்பட்டனர். ஊர் நெடுக சுயமரியாதைத் தத்துவம் கொண்ட வாக்கியங்களும், காகிதம், பச்சிலை தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. மகாநாட்டில் 2000 பேருக்கு மேல் பெண்கள், ஆண்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியவர்கள் கூடியிருந்தார்கள்.

ஊர்வலம் மகாநாடு மண்டபம் சேர்ந்ததும் வாழ்த்து கூறப்பட்டவுடன், திரு. மே. வே. துரைசாமி உடையார் அவர்கள் எழுந்து மகாநாடு கூட்டப்பட்டதின் விருத்தாந்தங்களை விளக்கி திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களைப்பற்றி சில புகழுரைகள் கூறி திரு. நாயக்கரை மகாநாட்டைத் திறந்துவைக்கும்படி வேண்டிக் கொண்டார். பிறகு, திரு. நாயக்கர்

பெருத்த கரகோஷத்திடையில் எழுந்து சில வார்த்தைகள் பேசினார். அதாவது, இம்முதலாவது மகாநாட்டை துவக்கும் பெருமையை தமக்கு அளித்ததற்கு நன்றி செலுத்துவதாகக் கூறி, இம்மாதிரி வகுப்பு மகாநாடுகள் ஒவ்வொரு வகுப்புக்கும் அவசியம் என்றும், ஒவ்வொரு வகுப்பும் மற்ற வகுப்புகளுடன் சரிசமமாகவும் ஒற்றுமையாகவும் நம்பிக்கையாகவும் கலந்து கொள்ளத்தக்க கொள்கைகளையே திட்டங்களாக வைத்து வேலை செய்ய வேண்டும் என்றும், எல்லா வகுப்புகளுக்கும் இம்மாதிரி நிலைமைகள் கைகூடினால்தான் எல்லா வகுப்புகளும் ஒன்றாய்க் கலந்து ஒற்றுமைப்பட முடியும் என்றும், அப்படிக்கில்லாமல் சிலர் வருணாசிரமக்காரர்களைப்போல் தாங்கள் எல்லாரையும் விட உயர்ந்தவர்கள் என்றும், அந்தப்படியே எப்போதும் இருக்க வேண்டும் என்றும், மகாநாடு கூட்டி தீர்மானம் செய்து கொள்ளுவதும், சிலர் தங்களுக்கு வகுப்பு மகாநாடு வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு ஒற்றுமைக்கு இடம் இல்லாமல் இருந்த நிலையில் இருப்பதுமான நிலையில் இருந்தால் நம் நாட்டில் உள்ள வகுப்பு வித்தியாசங்களும் கொடுமைகளும் ஒருக்காலமும் ஒழியாது என்றும், வகுப்பு மகாநாடு கூடாது என்பவர்கள் அறியாதவர்களும் சுயநலக்காரர்களுமாகத்தான் இருக்க வேண்டும் என்றும் சொல்லியதோடு, இம்மகாநாடும், தாங்கள் அந்த வம்சம் இந்த வம்சம் என்றும், தாங்கள் அதை ஆண்டவர்கள் இதை ஆண்டவர்கள் என்றும் தங்கள் தங்கள் பழம் பெருமைகளைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும் பாட்டிகதை பேசும்மகாநாடாக இல்லாமல் மக்களின் உயர்வு தாழ்வை ஒழிக்கவும், வகுப்பு வித்தியாசத்தை ஒழிக்கவும், ஒற்றுமைக்கும் சுயமரியாதைக்கும் ஏற்ற முறையில் தீர்மானங்கள் செய்து அமுலுக்கு கொண்டுவரவேண்டும் என்றும் பேசி மகாநாட்டைத் துவக்கும்படி வேண்டிக்கொண்டார்.

பிறகு உபசாரணைக் கமிட்டித்தலைவர் ஆத்தூர் திரு. எஸ். பழனிச்சாமி உடையார் பி. ஏ. பி. எல். அவர்கள் வரவேற்பு உபசார உபந்நியாசம் செய்ததும் தலைவர் திரு. மா. ரா. குமாரசாமியார் அவர்கள் தலைமைப் பேருரை நிகழ்த்தினார்கள்.

பிறகு திரு நாயக்கர் "மக்கள் முன்னேற்றம்" என்பது பற்றி 2 மணிநேரம் பேசினார் இத்துடன் மகாநாடு முடிந்தது.

இரண்டாம் நாள் நடவடிக்கை.

மறுநாள் காலையில் திரு முத்துக்குமார உடையார் அவர்கள் தலைமையில் மகாநாடு துவக்கப்பட்டதும், சாமி சிதம்பரனார் அவர்கள் "சமூக முன்னேற்றம்" என்பது பற்றி ஒன்றரை மணிநேரம் பேசினார். அவர், நமது சமூகத்தின் தலையில் மதத்தின் பேரால் சுமத்தப் பட்டிருக்கும் புராணங்களினுடையவும் சமயங்களினுடையவும் சாமிகளினுடையவும் ஆபாசங்களையும் அதன் நோக்கங்களையும் வெகு தெளிவாக விரித்து உரைத்தார்.

பிறகு திரு நாயக்கர் தீண்டாமை, கதர், மதுவிலக்கு பெண் உரிமை முதலியவைகளைப்பற்றியும் மூட பழக்க வழக்கங்களைப் பற்றியும் கோவில், பூசை, உற்சவம் முதலியவைகளால மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப்பற்றியும அவைகளால் மக்கள் முன்னேறாமல் இருக்க நேரிடுவதைப்பற்றியும் விரிவாய்ப்பேசினார்.

திரு. நாயக்கர் அப்போதே ஊருக்கு புறப்படுவதாய் பயணம் சொல்லிக் கொண்டதால் திருவாளர்கள் மே. வே. துரைசாமி உடையார், வெங்கிடாசல உடையார் ஆகியோர்கள் திரு நாயக்கருக்கு வந்தனோபசாரம்சொல்ல மகாநாடு 1 மணிக்கு கலைந்தது.

திருவாளர்கள் நாயக்கரும் சாமி. சிதம்பரனாரும் எஸ். வி. லிங்கமும் நேரே மோட்டாரில் கரூர் மார்க்கமாக ஈரோட்டிற்குப்புறப்பட்டார்கள். பிற்பகலில் மறுபடியும் மகாநாடு கூடி பல முக்கிய தீர்மானங்கள் செய்யப்பட்டன.

ஒரு நிருபர்.

## 'ஒருகாசுப் பத்திரிகை.'

மலாய் நாட்டில் சிங்கப்பூரில் திருவாளர் ஜி. எஸ். நாயுடு அவர்கள் ஓர் தினசரிப்பத்திரிகை ஆரம்பிக்கப்போவதாக அறிந்து நாம மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம. அப்பத்திரிகை பெரிய அளவில் நான்கு பக்கங்கள் கொண்டதாய் ஒரே விளம்பரத்துடன் ஒரு காசு (ஒரு செண்டு) க்கு விற்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதிலிருந்தே அது மற்ற பத்திரிகைகளைப் போல் வயிற்றுப் பிழைப்பை முன்னியோ திரவியந்திரட்டவோ வெளியிடப்படுவதன்று என்பது தெள்ளென விளங்குகின்றது. ஆனால் அது "குடி அரசு" பத்திரிகையின் கொள்கையுடனேயே, அதாவது, அரசியலின் பேராலும் மதத்தின் பேராலும் பார்ப்பனர்களும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் நம் ஏழை மக்களை வஞ்சிப்பதை தைரியமாய் வெளியாக்கி எல்லாரும் சுயமரியாதையையும் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அடையச் செய்ய வேண்டுமென்ற கொள்கையுடன் வெளிவருவதாக்காம் அறிந்தமனமாரவாவேற்பதுடன் அதைநம்மலாய்நாட்டுத் தமிழ்மக்களும இந்திய மக்களும் ஏனையோரும் அவசியம் ஆதரித்து வாங்கி வாசித்து பயனடையவேண்டுமென்று விரும்புகின்றோம.

ஈரோடு முனிசிபல் கவுன்சிலர்கள் தேர்தல்.

ஈரோடு கோட்டை வார்டுக்கு ஈ. ஓ. சி. முத்துசாமி கவுண்டரும், கருங்கல்பாளையம் வார்டுக்கு கே. எம். ஸ்ரீனிவாசம்பிள்ளை திரு பூவாத்தாக்கவுண்டர் ஆகியவர்களும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.


## சுவர்ண கார்ந்தம்.

பாண்டு, சோகை, காமாலை, பித்தப் பாண்டு, விஷப்பாண்டு, சூதகபாண்டு, நீர்ப் பாண்டு, பித்தவெட்டை, ஜுரக்கட்டி, சூதகக் கட்டி, குன்மம், பித்தவாயு, மதுமேகம், க்ஷயம், காசம், கைவீக்கம், கால்வீக்கம் வயிற்றுவீக்கம், கிறுணி, அதிசாரம், உஷ்ண வாயு, சூதகவாயு முதலிய அதிசாத்திய நோய்களும் ஆச்சரியப்படும்படி குணமாகி, நல்ல இரத்த விர்த்தி உண்டாகும்.

1-செ. 14-நாள் மருந்து விலை ரூ. 3—0—0

தங்கம் சோாதது 2-செ,

14-நாளைக்கு ரூ.2—0—0

7—நாள் மருந்து ரூ. 1—4—0

G. K. சுந்தரம்.

ஷண்முகானந்த வைத்தியசாலை,

திருவாரூர்.

## கிருஸ்தவ வன்னியர்களின் அடாதசெய்கை.

திலக்கோட்டை தாலூக்கா அம்மைநாய்க்கனூருக்கருகேயிருக்கும் அம்மாபட்டி என்னும் கிராமத்தில் செப்டம்பர் மீ 10 உ திங்கள் கிழமையன்று வேளாளர் ஒருவர் குடும்பத்தில் கல்யாணம் நடைபெற்றது. மணவாளன் ரயிலில் போர்டர் வேலையுடையவர். இவருடைய மைத்துனர் மோட்டார் ஓட்டுகிறவர். இவர்கள் யாவரும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

கல்யாணம்முடிந்தவுடன் வழக்கம்போல் ஊர்வலம் செல்வதற்காக ஒரு மோட்டார் வண்டியில் புறப்பட்டார்கள். அப்போது அங்கிருந்த மற்ற வன்னியர்கள், இவர்கள் தாழ்ந்த குடும்பத்தினரென்று நினைத்து, அவர்கள் மோட்டாரில் செல்வதைப் பற்றி பொறாமைப்பட்டு, ஊர்வலம் செல்லக்கூடாதென்றும் மீறிச் சென்றால் கொலை நடத்துவிடுமென்றும்பயமுறுத்தித் தடுத்துவிட்டார்கள்.

அத்தருணத்தில் அவ்வூர் பெரிய மனிதர்கள் அங்கு வந்து, கலகம் ஏற்படும் என்று நினைத்து மணமக்களை மோட்டாரிலிருந்து இறங்கிச் செல்லும்படி தீர்மானித்தார்கள். ஊர்வலத்தைதடுத்தவன்னியர்கள்ஜாதிபேதம் கவனிப்பதில்லையென்று சொல்லிக்கொள்வதோடு அவ்விஷயத்தை மற்றவர்களுக்குப் போதிக்கும் தன்மையுடைய கிறிஸ்தவ வன்னியர்கள். இப்படியிருக்க இவர்கள் தங்கள் கொள்கைக்கு மாறாக செய்ததைப்பற்றி யார்தான் வருந்தாமலும் கண்டிக்காமலும் இருக்கமுடியும். இனிமேலாவது இவ்வூரிலுள்ள வன்னியர்களாவது இன்னும் மற்ற யாராவது தங்களை உயர்ந்தவர்களென்றும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்களென்றும் மதித்து இழிவு படுத்தாமல் இவ்வூரிலுள்ள போதகர்களும் மற்றவர்களும் பார்த்துக்கொள்வார்களென்று நம்புகிறேன்.

"பொதுஜன ஊழியன்"

## மேலூரில் சுயமரியாதைப் பிரசாரம்

சென்ற 18—9—28 ஆம் தேதி மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை உலகநாத சாமிமடாலயத்தில் திருவாளர்கள் கிழையூர் சாமி, ராமநாதன். சோமகிரிசாமி சங்கரபிரசாதம் இவர்கள் வள்ளுவர் ஞானவெட்டி, கபிலாகவல், சூடாமணி ஞானம், இவைகளின் மேன்மையைப்பற்றியும் வேதம், புராணம், இதிகாசம் முதலிய வைகளிலுள்ள புரட்டுகளைப்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். துங்கன் சொக்கநாண்டிதேவர்.

## கீவாலூர் திருவருட் பிரகாச வள்ளலார் திருநாள்.

விபவ ஹூ புரட்டாசி மாசம் 1 தேதி திருவருட் பிரகாச வள்ளலார், ரான்காவது ஆண்டுவிழா திராவிட சங்கத்தின் ஆதரவில் புத்த நிலையத்தில் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது. இருநூற்றுக்கு மேற்பட்ட ஏழை மக்களுக்கு உணவளிக்கப்பட்டது.

பிச்சு முதலி.

## மதுரை வைக்கம் வீரர் வாசகசாலை அறிக்கை.

நமது மாபெருந் தலைவரும் 'குடி அரசு', "ரிவோல்ட்" பத்திரிகைகளின் பத்திராதிபருமாகிய "வைக்கம் வீரரு"மான திருமிகு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் பேரில் ஏற்பட்டுள்ள அன்புப் பெருக்காலும் பொது மக்களின் கல்வி நலன் கருதியும் மதுரை அழகாடியிலுள்ள கலைமகள் நிலையம் என்னும் கட்டடத்தில் "வைக்கம் வீரர் வாசகசாலை" திறவப் பெற்றுள்ளது. கீழ்க்கண்ட அன்பர்கள் நிர்வாக உறுப்பினராக ஏற்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

திருவாளர் வீ. மு. பொன்னையா அவர்கள், தலைவர். ச. சுந்தரம் பிள்ளை, ப. வீரக்கோனார், உப தலைவர்கள் வ. எஸ். அருணாசலம், தலைமைக்காரியதரிசி ஓ. கிருஷ்ணன், வீ மு. ஆறுமுகம், உபகாரியதரிசிகள். ஆ. ராஜமணி, தனாதிகாரி. ச. முத்தழகு பிள்ளை, ஜ. ஏ. கே. சாமி நாயுடு, ம. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, மஸ்தான் சாயபு, வ. வில்லியம் ராஜூ, மு. பாலசுப்ரமணியம், சங்கரன் பிள்ளை, வ. சண்முகம், நிர்வாக உறுப்பினர்கள்.

## கோவை அருந்ததியர் துயரம்.

1926-ம் ஆண்டில் கோவை அருந்ததியர் வீதியில் வாசகசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சுமார் ஒரு வருஷமாக சரிவர நடந்து வந்தது. ஷை வாசகசாலைக்கு ஷை ஜாதியார் ஒருவர் தம்முடைய வீட்டை இலவசமாகக் கொடுத்து உதவி செய்தார். திடீரென அவருக்கு வீடு வேண்டியதாக இருந்ததினால் வாசகசாலையைக் காலிசெய்து வீட்டை அவருக்கு கொடுத்துவிட்டோம். வேறு தகுதியான வீடு கிடைக்காமல் வாசகசாலை நடத்த முடியாமல் நின்று விட்டது. மறுபடியும் வாசகசாலை நடத்துவதற்கு எல்லோரும் ஆவலாக இருக்கிறார்கள். ஆனால் சிறு வீடு கட்டி வாசகசாலை நடத்தலாமென்றால் பொருள் இல்லாமல் திகைக்க வேண்டியதாய் இருக்கிறது.

இந்த சமயத்தில் ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள் முன்னேற்ற மடைய வேண்டும், முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற உண்மையான மனமுடைய தனவந்தர்களும் கோவை முனிசிபல் சேர்மென் அவர்களும், கவுன்சிலர்களும் கருணை வைத்து முனிசிபாலிட்டியிலிருந்து 200 ரூபாய் உதவிசெய்து வாசக சாலையைக் கட்டவும் நடத்தவும் உதவிசெய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

ஆர். நஞ்சையா செட்டி, காரிதரிசி.

## இரட்டைத் தலைக் குழந்தை.

தென்னாற்காடு ஜில்லா கள்ளக்குறிச்சி தாலூகா சின்ன சேலம் கிராமத்தில் போலீஸ் கான்ஸ்டேபிளாக இருந்துவரும் 881 கெ. திரு. தங்கவேல் படையாச்சியின் மனைவி 2 நாள் பிரசவ வேதனைப்பட்டு 13-9-28 தேதி இரவு 2 மணிக்கு இரண்டு தலை நான்கு கை நான்கு கால் ஒரு உடலையுடைய ஆண்மகவு ஒன்று பிரசவித்தாள். ஆனால் அது உடனே இறந்துவிட்டது.

ஒருநிருபர்

## மாகாண, சுயமரியாதை மகாநாடு வரவேற்பு கழககூட்டம்.

29—9—28-ந் தேதி சனிக்கிழமையன்று தஞ்சை ஜில்லா போர்டு மீட்டிங் ஹாலில் மாலை 4-30 மணிக்கு ராவ்பகதூர் A. T. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையின் கீழ் மாகாண மகாநாட்டின் வரவேற்புக்கழக கூட்டம்நடைபெறும். வைக்கம்வீரர் திருநாயக்கர் அவர்கள் அன்று விஜயம்செய்வார்.

காரியதரிசிகள்:— R. சின்னையா பிள்ளை, கனகசபை நாடார், C. நடராஜன்.

## சுண்ணாம்பிருப்பு ஆதிதிராவிட முன்னேற்ற சங்கம்

3—9—28 திருக்கோஷ்டியூர் போஸ்ட் சுண்ணாம்பிருப்பில் ஷை சங்கத்திறப்புவிழா நடைபெற்றது. பண்ணிதிருத்தி திரு. சி. வயி. சோணையன் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள்.

கனம் சந்தனம்அவர்கள் சங்கத்தினவசியத்தைப்பற்றியும், மணக்குடி திரு. அ. ம. கூத்தன் அவர்கள் ஒற்றுமையைப்பற்றியும், பிராமணம்பட்டி திரு. சி. க. முனியன் அவர்கள் கல்வியைப்பற்றியும், ஷை யூர் திரு. எம். ஆர். தண்ணிமலை "மாணுக்கரொழுக்கம்" என்பதுபற்றியும் பேசினார்கள்.

சிவகெங்கைதாலுக் போர்டு பிரஸிடெண்டு திரு. ராமச்சந்திரன் சேர்வையவர்கள் போர்டுஸ்கூல்களில் ஆதிதிராவிட மாணாக்கர்கள் வகுப்பு வேற்றுமையின்றிக் கல்வி பயிலச்செய்துவரும் அரிய தொண்டிற்கு நன்றிசெலுத்தப்பட்டது.

சங்கவுத்தியோகஸ்தர்கள், 1 தலைவர் திரு சி. வயி சோணையன் 2 உப தலைவர் திரு. அ. ம. கூத்தன் 3 காரியதரிசி திரு. மரு. சந்தனம் 4 உதவிகாரியதரிசி திரு. சி. க. முனியன் 5 பொக்கிஷதார்திரு. எம் ஆர். தண்ணிமலை 6 மண்டபகாரியஸ்தர் திரு. நா. மந்தயன்

ஒருநிருபர்

## அனுப்புபாளையம் சுயமரியாதை வாசகசாலை திறப்புவிழா

செப்டம்பர் மீ 13-உ மாலை இவ்வூர் ஆத்திரன் சர்ச் கட்டிடத்தில் பல பிரமுகர்கள் சுயமரியாதை வாலிபர்கள் பலர் முன்னிலையில் இத் திறப்புவிழா நடைபெற்றது.

இவ்விழாவின் தலைவராக திரு-கோ. நடேலப்ப செட்டியார் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பின் வாசகசாலையின் அவசியம், சுயமரியாதை என்பவைபற்றிமுறையேதிரு பி சத்தியனாதபிள்ளை, திரு அ. ப. ராயப்பசெட்டியார் அவர்கள் உபந்நியாசம் செய்தார்கள். வாசகசாலைக்கு திரு பி சத்தியனாதபிள்ளை, தலைவராகவும் திரு அ ப ராயப்ப செட்டியார் காரியதரிசியாகவும் திரு ஈ அருளப்ப செட்டியார் தனாதிகாரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

சுயமரியாதை இயக்கத்திற்கு சம்மந்தமான பத்திரிக்கைகளும் புஸ்தகங்களும் மட்டும ஆதரிப்பது என்கிற தீர்மானமும் நிறைவேறியது

பின்னர் திரு ரா ப அனந்த கிருஷ்ணன் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது

ஒருநிருபர்

## திருச்சி யாதவகுல வாலிபர் சங்கம்.
## ஆண்டுவிழா.

சென்ற 16-9-28-ல் தி கோ. பெரிய கடைத்தெருவு ஸரஸ்வதி விலாஸ் பாடசாலையில் மேல்படி ஆண்டு நிறைவுவிழா திருவாளர் டி. ஆர், கிருஷ்ணசாமி பிள்ளை அவர்களின் தலைமையில் மாலை 3 மணிக்குக் கூடியது தேநீர் விருந்து நடந்ததும் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் துடங்கியது சங்க காரியதரிசியால் வருட அறிக்கை வாசிக்கப்பட்டது. திருவாளர்கள் தி, ஐயன் பெருமாள் கோன் திண்டுக்கல் வீராசாமிபிள்ளையவர்கள் ஜனுப் சுலைமான் ராவுத்தர் முதலியவர்கள் பல அரிய பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர்கள், வந்தனம் கூறி சங்கம் 9-30 க்கு இனிது முடிந்தது.

காரியதரிசி.

## ஸ்ரீ இராமானந்த விஸ்வகர்ம சன்மார்க்க சபையின் ஆரம்ப விழா.

நாளது விபவ ௵ புரட்டாசி ௴ 8-௳ ஞாயிற்றுக் கிழமை யன்று ஈரோடு தாலூக்கா மூட்டக்குறிச்சி கிராமம் கரிகாலி அம்மன் ஆலயத்திற்கடுத்த சத்திரத்தில் குரு பூசை சமாராதனை உபந்நியாசங்கள் முதலியவைகளுடன் ஷை விழா நடைபெறுகின்றது. அவ்வமயம் விஸ்வகர்ம சகோதரர்கள் அனைவரும் விஜயம் செய்யும்படியாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்,

கு, பசுபதிலிங்க உபாத்தியாயர்

## ஒரு அய்யங்கார் பார்ப்பனன் மோசடி

கொழும்பு "தேச பக்தன்" ஆபீஸில் வேலைபார்த்து வந்தவனும் இப்போது "ஜன நேசன்" பத்திரிகையில் வேலை பார்ப்பவனுமான ஒரு அய்யங்கார் பார்ப்பான் கரூர் பிரபல வைத்தியர் ஸ்ரீமான் பக்கிரியா பிள்ளையவர்கள் மனைவி ஸ்ரீமதி மைலம்மாளுக்கு அனுப்பும்படிகொடுத்த ரூ. 15. அனுப்பிவிட்டதாகவும் ரசீது தவறி விட்டதாயும் பணத்துக்குத் தான் உதரவாதியென்றும் சொன்னான். பணம் கொடுத்து இரண்டுமாதமாயும் வாங்கிக்கொண்டதற்கு ரசீது வாராததால் அவர்களுக்கு எழுதிக்கேட்டதில் பணம் அனுப்பவில்லை யென்றும் தெரிகிறது. இதைப்பற்றிய முழுவிபரம் பிறகு எழுதுவோம். கோ மீனாக்ஷியம்மாள்

## பார்ப்பனீயமொழித்த சடங்கு.

சேலம்ஜில்லா ராசிபுரத்தில் இருக்கும் டைலர் ஸ்ரீமான் எம். காவேரி நாயுடுகார் அவர்கள் தமது சொந்தக்காரர்வீட்டில் ஒருவர் இறந்து போன காரியார்த்தமாக 12—9—28 தேதியில் நடைபெற்ற புண்ணியாவசனத்தை பிராமணர்களைக் கொண்டு நடத்தவேண்டுமென்று பிடிவாதம் செய்த தமது பந்துக்களுக்கு வேண்டிய சமாதானங்களை கூறி, பிராமணர்களை அறவே நீக்கி, ஷை காரியங்களை தாமாகவே அதிக விமரிசையாக முடித்து ஏழைகளுக்கும் அன்பாக அன்னமளிக்கச் செய்தார்.

நா. க. அங்கமுத்து

## மாத்தூரில் பார்ப்பனீய மற்ற திருவிழா.

செங்கற்பட்டு ஜில்லா ஸ்ரீ பெரும்புதூர் தாலூகா, மாத்தூர் கிராமவாசிகள், ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியை முன்னிட்டு வழக்கமாய் நடத்தும் வருஷாந்திர உத்சவத்தை பிராமணர்ச்சகர்களை நிவர்த்தித்து, தங்களுடைய சமூகத்திலிருந்தே, ராதாகிருஷ்ண நாயுடு அவர்களைக் கொண்டு இனிது நடத்தினர் இந்த தாலூக்காவில் நடந்தேறிய பார்ப்பனீய மற்ற திருவிழா இதுவே முதல்தடவையாகும்.

## விதவாவிவாக சகாய சபை, சென்னை

"சுயமரியாதைத் தொண்டர்" ஒருவர் எழுதிய 13-9-28௳ கடிதத்திற்கு ஷை சபையின் காரியதரிசி, தெரிவிக்கும் பதில்.- ஷை நண்பர் பேரிலோ, எழுதியோ முழு விபரங்களையும் தெரிவித்தால அவருக்கு தக்க ஏற்பாடுகள் செய்யத் தடையேயில்லை. இச்சபைக்கு வரும் விஷயங்களை ரகஸ்யமாகவே வைத்திருப்போம், ஷை நண்பர் யாதொரு லஜ்ஜையின்றித் தெரிவிக்கலாம்.

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

S. C. No. 1236 of 28.

ராம கவுண்டன் ... வாதி.

மாறப்ப கவுண்டன் ... பிரதிவாதி.

ஷை செம்பரில் வாதி பிரதிவாதி பேரில் புரோநோட்டு படிக்கும் கைமாத்து வகையிலும் ரூபா 56-2-0 வரவேணுமாய் செய்த தாவா கடைசியாய் 25-9-28ல் விசாரணை வாய்தா ஏற்பட்டிருக்கிறது. அந்த தேதியில் பிரதிவாதி பகல் 11 மணிக்கு நேரிலாவது அல்லது வக்கீல் மூலமாவது தகுந்த முகாந்திரத்தை தெரிவித்துக்கொள்ளாதவரை வாதி ஒரு கக்ஷியாய் டிக்ரி பெற்றுகொள்ளப்படும் என்ற விபரம் இதின்மூலம் தெரிவித்திருக்கின்றேன்.

ஈரோடு, 18-9-28 } (Sd.) M. Venkatachalam, Pleader for Plaintiff.

## மதிப்புரைகள்.

### "பிரசண்ட மகா விகடன்"

"பிரசண்ட மகா விகடன்" என்னும் தமிழ் மாத சஞ்சிகையொன்று எமது பார்வைக்கு வந்துள்ளது. அதனுள்ளடங்கிய நாற்பது பக்கங்களும் விகடப்பாக்கள், விகடப்பிரசங்கங்கள், விகடக்கதைகள், விகட சம்பாஷணைகள், விகடத்துணுக்குகள், விகடச்சித்திரங்கள் கொண்டனவாகவே இருக்கின்றன. விகட நுட்பங்களைப் படித்துணர்ந்தனுபவிக்க முடியாதவர்கள் கூட சித்திரங்களைப்பார்த்து இன்புறலாம்.

இவ்விகடங்களினூடே ஆசிரியர்ராஜீயத்திலும் சமூகத்திலும் உள்ள புரட்டுகளையும் வெளியாக்கிக்கண்டிப்பதுபாராட்டத்தக்கது இச்சஞ்சிகையின் தன்மையைப் பார்த்தால் இதன் ஆசிரியர் தமிழிலும், ஆங்கிலத்திலும் சமூக ராஜீய விஷயங்களிலும் நல்ல தேர்ச்சி பெற்றவரென்று தெற்றெனத் தெரிகின்றது. வருடசந்தா ரூ. 1-8-0. வேண்டுவோர்

சு. கனகசபாபதியார், பத்திராதிபர்,
"பிரசண்ட மகா விகடன்"
பாலக்கரை, திருச்சி.

என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### குருமுனி பற்பொடி

செங்கோட்டை திருவாளர் எஸ், மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தயாரித்து விற்பனைசெய்யும் "குருமுனி பற்பொடி" என்ற பெயருள்ள பற்பொடி டப்பி யொன்று வரப்பெற்றோம். இப்பற்பொடியை உபயோகித்துப் பார்த்ததில் அது நல்ல வாசனையுள்ளதாயும் மனோ உற்சாகம் தரக்கூடியதாயும் இருக்கிறது.

வெளிநாட்டுப் பற்பொடிகளைவிட இது குணத்தில் மேலானதாயும் விலையில் குறைந்ததாயும் இருப்பது குறிப்பிடத் தக்கது. விலை டப்பி 1-க்கு அணா 4.

விலாசம்:— மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
வியாபாரம், தெற்குரதவீதி,
செங்கோட்டை


ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க பதக்கங்களும் பரிசுபெற்று வருவது.

குருநாத சஞ்சீவி எண்ணை.

7-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூபாய் 3-0-0 தபால் சார்ஜ் வேறு.

இந்த எண்ணை முக்கியமாய் மூலவியாதி உள்ளவர்கள் சாப்பிட்டால் பூர்ணசுகமடையலாம். தீரும் வியாதிகள் :— மூலச்சூடு, வெட்டைச்சூடு, வெள்ளை, பவுத்திரம், மேக காங்கை, நீரேக எரிச்சல், மலசிக்கல், வாய்ப்புண், நீர் எரிச்சல், முதலிய சகலவியாதிகளையும் உடனே கண்டிப்பதோடு, நீரேகத்துக்கு குளிர்ச்சியை கொடுக்கும். பத்தியம் இல்லை.

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஆறாத புண்களை 3 வேளையில் குணத்தைக் காட்டக்கூடிய,

சித்த சர்வ ரணக் களிம்பு.

டப்பீ விலை ரூபாய் 1-0-0 வி, பி. வேறு.

இந்தக் களிம்பை புண் இருக்கும் இடத்தில் காலை, மாலை இருவேளையும் தடவிக்கொண்டு வந்தால் 5-நாளையில் எவ்விதமான புண்களும் ஆறிவிடும் என்பது கை கண்டபலன்.

விலாசம் :— ராஜவைத்திய ஆஸ்ரமம்,
செவ்வாய்பேட்டை, சேலம்.

6-ம் பக்கத் தொடர்ச்சி.

விஷயம். இதனால் அஹிம்ஸா மூர்த்திகளும் நாட்டிலுள்ள மக்களுக்கு சமத்துவம் சகோதரத்துவம் சுதந்தரத்வம் ஆகியவைகளுக்கு உபதேச கர்த்தாக்களுமாகிய சமணர்களைக் கழுவேற்றச்செய்து நாட்டிலுள்ள ஜனங்களுக்கு ஹிம்ஸை கொலை சுராபானம் உயர்வு, தாழ்வு, அடிமை, வஞ்சகம் ஆகியவற்றை சம்மந்தன் பரவச்செய்தானென்று ஏற்படுகிறது.

இக்கொடியோனின் சரித்திரத்தை புகழ்ந்துரைப்பதும், சமணர்களது மஹாபுராணத்தின் பெயரைப்பார்த்து பெரியபுராணமென்று சேக்கிழாரால் நாமஞ் சூட்டப்பட்ட நூலில் அன்பு ததும்புகிறதென்று பலபண்டிதர்களும் குறிப்பாக ஸ்ரீமான் முதலியாரவர்களும் சொல்வதைப்பார்த்தால்

அறமாமுயிர்க்கொலை யென்னின், மற்றுருயி
ரோம்புதலோ
மறமாவது? மறஞ் செய்தவ ரெய்துவரானை
மென்றூர்,
பிறமாகாகறஞ்செய்தவர்க்கோ? பின்டிவாமன்
மெய்ந்நூற்
றிறமாறு கொண்ட சின்னூற்றின்னார்களொ
ன்ற செப்புமினே.

என்றசெய்புள் ஞாபகத்திற்கு வருகிறது. மேலும்சமணமதம் நல்லதுதான்; அது உலகிற்கு கேட்டை விளைவித்ததென்று ஸ்ரீமான் முதலியார் சொல்லுகிறார். சம்பந்தரே கடவுள் துதியில் நீசெய்த வேதத்தையும் வேள்விகளையும் நிந்திக்கிறசமணர்களென்று குற்றஞ்சாட்டியிருக்கிறாரே அல்லாமல் வேறு எவ்விதகுற்றமும் செய்ததாக சம்பந்தர் சொல்லவில்லை. இக்காலத்திலும் கும்பகோணத்தில் 8 ஆடுகளும், லால்பேட்டையில் 30 ஆடுகளும் வேதத்தின்பெயராலும், வேள்வியின் பெயராலும் கொல்லப்பட்டு புசிக்கப்பட்டதை அநேகர் ஒப்புக்கொள்ளாமல் பத்திரிகை வாயிலாக தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்திபிருக்கின்றனர். இதைத்தான் ஆதியில் சமணர்களும் உபதேசித்தார்கள்.

இதனால் உலகத்திற்கு தீங்கிழைத்தவர்கள் சமணர்களா? பிறரா என்பதையும், அல்லது சமணர்கள் இழைத்ததீங்கு இதைத்தவிர வேறுஏதாவது உண்டா என்பதையும் ஸ்ரீமான் முதலியாராவது வேறுபண்டிதர்களாவது தெளிவுபடுத்துவார்களா?

இல்லையேல் வேத வேள்வி நிந்தையையே சமணர்கள்செய்த குற்றமென்று சேக்கிழார் போல் ஸ்ரீமான் முதலியாரவர்களும் மற்ற பண்டிதர்களும் நினைப்பாராயின் இந்தக்காலத்திலும் வேதத்தையும், வேள்வியையும் நிந்திப்பவர்கள் எல்லோரும் குற்றவாளிகளாக வேண்டாமா? அப்படியாயின் திரு முதலியாரும், மற்றும்பல பண்டிதர்களும் பலரும் குற்றவாளிகளாகவேண்டாமா? இவர்களைக்கழுவேற்ற ஒருசம்பந்தன் வரவேண்டாமா?

ஆகையால் இதைக்கண்ணுறும் வாசகர்கள் தெளிவிற்கும், மயக்கத்திற்கும் உள்ள வித்தியாசத்தை யுணர்ந்து ஸ்ரீமான் நாயக்கரவர்கள் அப்போதைக்கப்போது உண்மை அறிவினுல் வெளியிடும் உரைகளைப் பின்பற்றுவார்களாக.

சத்தியவாதி.





## ஜீவாம்ருதம்.

வைத்யரத்ன பண்டிட் கோபாலாச்சார்லு அவர்களால் சிறந்த மூலிகைகளினின்றும் கண்டு பிடிக்கப்பட்டு கால் நூற்றாண்டுகளாக உலகில் நிலவி வருவது. ஆரோக்கியம், தேஜஸ், வீரியம், பலம் முதலியவைகளைத் தன்னுள்ளடக்கிய தேவாம்ருத புட்டி என்பது மிகையா! மெலிந்த தேகிகளுக்கும், நோயாளிகளுக்கும் இது உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்.

இன்றே ஒரு புட்டிக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூ. 3—4—0

ஆயுர்வேதாஸ்ரமம்.

151 கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

தபாற் பெட்டி 287, சென்னை.



நீங்கள் அநேக மருந்துகளைச் சாப்பிட்டும் வியாதி தீராமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

அப்படியானால் பழநி, சி. எம். சாமி,

## குருதாம்பர பஸ்பம்.

சாப்பிடுங்கள்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது.

திமிர் குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து, மேகம், தடிப்புகள், மாறிவிட்டது. ஆறாத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல், குன்மம், வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல்முதலிய எல்லாவியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம் நற்சாக்ஷிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ 50. 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும் விலை ரூ. 25 ஏழைகளுக்குப் பாதிவிலை.

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பர பஸ்பத்தால் பூர்ணகுணமாகி போற்றுவதை கவனியுங்கள்.

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேக வியாதியால் ஒருவன் வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ண குணமானான். மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A. M. துரைசாமி, 80-நிர்மார்க்கம் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27,

தாதுபுஷ்டிக்கு, பழனி, சி. எம். தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்.

வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்துபோன ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்கிறது. தாதுவிர்த்தியை கொடுத்து புத்திர சந்தானத்தை உண்டு பண்ணும். பத்தியமில்லை, 24-நாள் பஸ்பம் விலை ரூ. 10—0—0.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி, S. I.

## புதுப்பபயிட்டில் சுயமரியாதைச் சங்க ஸ்தாபனம்

இவ்வட்டகையில் தீவிரபிரசாரம் செய்து வரும் அருப்புக்கோட்டை திருவாளர். கே பாண்டியனவர்களும் இராமநாதபுரம் ஜில்லா திருவாளர் தி. கருப்பையாபிள்ளையவர்களும் சோகில்பட்டி பா. வெ. ராமசாமி செட்டியாரவர்களும் விபவ ௵ ஆவணி மாதம் 23 ந் தேதி (7-9-28) இவண் விஜயம் செய்து இந்நகர் கொத்தாளமேட்டின் முன்பாக அழகிய நல்லூர் திருவாளர் எம் எஸ் திருவேங்கிடராமானுஜ செட்டியாரவர்கள் அக்ராசனத்தின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூட்டி "பார்ப்பனீயமும் மதப்புரட்டும்" என்பதுபற்றியும் "சுயமரியாதையின்" அவசியத்தைப்பற்றியும் "சாமியும் சமயமும்" என்பதுபற்றியும்பேசினார்கள். சுயமரியாதைச் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது.

திரு. சு. க. போடிநாயுடு காரு தலைவராகவும் திரு. தி. திம்மாசெட்டியாரவர்கள் காரியதரிசியாகவும் திருவாளர் நா. தி. செங்கப்பசெட்டியார் க. நா. தி. சின்னச்சாமிசெட்டியார் பு. செ. அ. ராமசாமிசெட்டியார் ஈ. சித்தமசெட்டியார் வா. ராமசாமிசெட்டியார் நா. ராமசாமிசெட்டியார் ட. செ. பா. செங்கப்பசெட்டியார் அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டு மங்களகரமாக இரவு 11-30 மணிக்குக்கூட்டம் இனிதுகலைந்தது.

காரியதரிசி.

## ஓமலூர் யூனியன் போர்டில் இரட்டை சேர்மென் வேடிக்கை.

ஓமலூர் யூனியன் போர்டுக்கு இரண்டு கனவான்கள் பிரசிடெண்டுகள் என்று சொல்லிக் கொள்ளுகின்றார்கள். இது, ஒரு மெம்பர் இரண்டு பக்கமும் கையெழுத்திட்டு ஓட்டு செய்திருப்பதால் ஏற்பட்டது என்று சொல்லுகின்றார்கள். இதைப்போல் வேடிக்கை எப்போதும் கண்டதில்லை.

இரு கக்ஷியார்களின் ரிபோர்ட்டின்மேல் சங்ககிரி தாலூகா போர்டார்கள் விசாரணை செய்தார்கள். அதில் திரு. அர்த்தநாரி செட்டியாருக்கு அநுகூலமேற்பட்டதாய் சொன்னார்கள். அப்புறம் சேலத்தில் சிவிலில் விவகாரம் நடந்தது. அங்கு திரு. குப்புசாமி செட்டியாருக்கு அநுகூல மேற்பட்டிருப்பதாய் சொல்லுகின்றார்கள. அதற்கு மேல் அப்பீலுக்கு மதராசுக்கு போவதாயும் வதந்தி உலாவுகிறது. வெ. கதிரி செட்டி.

## கொப்பனுபட்டி வாசகசாலை, வித்யாசாலை ஆண்டுவிழா.

விவேகானந்த வாசகசாலையின் ஆறும் ஆண்டு நிறைவுவிழாவும், மாணிக்கவாசக வித்யாசாலையின் இரண்டாம் ஆண்டு நிறைவிழாவும், ஒருங்கே. விபவ ஆண்டு ஆவணித் திங்கள் 29 ஆம் நாள் கீழைச்சிவற்பட்டி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் கலாசாலைத் தலைமை ஆசிரியர் உயர்திருவாளர். அ. மு. சரவணமுதலியாரவர்கள் தலைமையில் நடந்தேறியது.

பல அறிஞர்கள் கல்வி, சமயம், தேசாபிமானம் முதலிய விஷயமாய் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். காரியதரிசி.


உலகப்பிரசித்தியும் அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும்பெற்ற
டாக்டர் எஸ். பி மருந்துகள்.

[ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

இந்த ரசம் வியாதிகளுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும், ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரஸம் தான். நாழிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு மூலவிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரஸம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி உடனுடன் கிரமமாய் மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரப் கேட்லாக் பார்க்கவும்.

24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்த உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. வி. பி. வேறு.

தண்டபாணி வைத்தியசாலை,
293, சைனாபஜார், மதராஸ்,

64 — பக்கம் — 64

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆனந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட 1...0...0
வெளி நாடுகளுக்கு முன பணம் ரூ 1...4...0

மாதிரி காபி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—' விகடன்", டெலிபோன் நெ 3311.


பார்ப்பனர் உயர்ந்தவர் என்பதை மறந்துவிடு.

4-ம் பக்கத் தொடர்ச்சி

ம் சுமந்திரனுமாவர். அவர்களெல்லோரும் அரசனுடைய வஞ்சகத்துக்கு உடந்தையாகவே இருக்கின்றனர். மந்தரைக்கும் கைகேசிக்கும் நடந்த பேச்சினாலே அவர்கள் தசரதனுடைய வாக்குறுதியை அறிந்தவராகக் காணப்படவில்லை. இருந்தாலும் அவர்கள் அறிந்திருந்தால் என்செய்வது என்றே தசரதன் அவர்களும் அறியாமல் முடிசூட்டலுக்கு ஏற்பாடுசெய்தான்.

மந்தரை கைகேசிக்கு மிகவும் வேண்டியவளாதலால் அவள் நலனும் சுயநலனும்கருதியே இராம பட்டாபிஷேகத்தை தடைப்படுத்தி பரதனுக்கு முடிசூட்ட நினைக்கிறாள். கைகேசி வெளுத்ததெல்லாம் பாலென்று நினைக்கிறவள். மந்தரை செய்தி சொன்னதும் மகிழ்ந்து மணிமாலை தருகிறாள். அதை கூனி வாங்காமலே அவளுக்கு மேலும் புத்திகூறுகிறாள். அதாவது, இராமன் முடிசூடியபின் தனக்கு அடுத்த பங்காளியான பரதனைக் கொன்றுவிடுவானென்பதும் இராமன் விவேகி, இராசதந்திரி, பரதன் ஒன்றுமறியாத வெள்ளறிவன் என்பதும் கைகேசி கோசலைக்கு அடிமையாகவேண்டிவருமென்றும் பரதனுடைய மனைவிமார் துக்கத்தையும் இராமனுடைய மனைவிமார் இன்பத்தையும் அடைவர் என்பதுமே. இக்கூற்றினால் பரதனும்இராமனும் பலமனைவியருடனிருந்தாரெனத் தெரியவருகிறது. இராமன் ஏகபத்தினி விரதன் என்று உலகினர் கூறும் பேச்சு பொய்ப்பேச்சே. வால்மீகி இராமன் பல மனைவிமாருடனிருந்தவனென்றே கூறுகிறார். ஏமாற்றுக்காரராகிய கம்பரோ அதற்கு மாறாக இராமனை ஏகபத்தினி விரதனைப்போல காட்டி உலகத்தை ஏமாற்றுகிறார்.

மேலேகண்ட கூற்றிலும் கைகேசி மனமாறாமல் இராமனிடத்திலிருந்த அன்பைக்காட்டுகிறாள். அவனுடைய ஒழுக்கத்தைப் பாராட்டுகிறாள். வஞ்சகனும் பல தாரகமணனுமாகிய இராமன் அவ்வளவுதூரம் கைகேசி ஏமாறும்படி மிக நல்லவனைப்போல நடந்திருக்கிறான். அவன் இலக்குமணனிடம் தான் உயிரோடிருப்பதும் அவன் பொருட்டே என்று இணங்கப்பேசி ஏமாற்றினானல்லவா? மிகவும் இராசதந்திர நிபுணன்.

நூறு ஆண்டுகளுக்குப்பின் பரதனுக்கு பட்டம் வருமென்று மயங்கிய கைகேசியை மறுத்து மந்தரை உண்மையைக்கூறி பரதனும் அவனுக்கு வேண்டியவனாகிய சத்துருக்கனும் இல்லாதபோது தசரதன் செய்யத்துணிந்த தீமையை உணர்த்துகிறாள். கைகேசி தசரதனுடையமையலில் மயங்கி அவன் தூண்டுதலால் பரதனை அடிக்கடி பாட்டன் வீட்டுக்கனுப்பியதே இத்தனைகேட்டுக்குங்காரணமென்பதையும் கூறுகிறாள். மேலும் கைகேசியால் அவமதிக்கப்பெற்ற கோசலை தன் மகன் பட்டம் பெற்றதும் கைகேசியை மிகவும் அவமதிப்பாளென்றும் இராமன் கட்டாயம் பரதனைக் கொல்வானென்றும் கூறுகிறாள். இதனால் கைகேசி மனம்மாறுகிறது.

கம்பர் புரட்டு.

இனி புரட்டுக் காராகிய கம்பர் இதைப்பற்றி யாது கூறுகிறாரெனக் கவனிப்போம்.

வால்மீகி, மந்தரை கைகேசியைச் சத்தமிட்டு எழுப்பினாளென்ன, கம்பர் அவள் அவளைக் காலைத் தொட்டு எழுப்பினாளென்கிறார். உனக்குக் கேடு வந்ததென்ற கூனியை கைகேசி உன்முகம் வாடியதால் உனக்கு என்ன தீங்கு நேர்ந்ததென்று கேட்டாளென்று வால்மீகிகூற (இதனால் கைகேசி நற்குணம் விளங்கும்) கம்பரோ 'எனக்கென்ன தீமை' என்றனள் கைகேசி என்கிறார். (இதனால் கைகேசிசுயநலம்புலனாகிறது). மேலும்வால்மீகி கூறாததாகிய 'இராமன்சிறுபிள்ளையாகஇருக்கும்போது வில்லில் ஒரு மண்ணுண்டையை தொடுத்தெய்ய அது கூனிமேல் விழுந்தது' என்ற கதையை அதனால் இராமன்மேல் கூனி வைரமுடையாள் என்பதற்குக் காரணமாகக் காட்டுகிறார். இப்பொய்க்கதையை இவர் எங்கேதான் கண்டாரோ. கைகேசி கொடுத்த மாலையை கூனி வாங்கவில்லையென்று வால்மீகி கூற, கம்பர் அவள் அம்மாலையைக் கீழேபோட்டு மண்ணில் குழியுண்டாக மிதித்தாள் என்று கூறுகிறார்.

“பரதன் புல்லறிவன், அரசதந்திர மறியாதவன், சமயமறிந்து செயல்புரியத் தெரியாதவ”னென்று கூனி கூறியதாக வால்மீகி கூறக் கம்பரோ அதற்கு மாறாக :—

“கல்வியு மிளமையும் கணக்கிலாற்றலும்
வில்வினை யுரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற்சேயது
புல்லிடையுகுத் தமுதேயும் போலென்றாள்”

என்று முற்றிலும் மாற்றிக் கூறுகிறார்.

வால்மீகி ராமாயணத்தில் கைகேசி ஓரிடத்திலேனும் மந்தரையைக் கடிந்து பேசியதாகக் காணப்படவே இல்லை. அவளுடைய கணவனாகிய தசரதனைப் பலவாறு பாபியெனவும் வஞ்சகனெனவும் தீயோனெனவும் மந்தரை மிக இகழ்ந்து பேசிய இடத்திலும்கூட கைகேசி அவளுடைய பேச்சுக்களில் ஒரு சிறிதும் கோபமுற்றவளாக வால்மீகி கூறவே இல்லை. அப்படியிருக்க கம்பரோ, கைகேசி மந்தரையை நோக்கி மிகவும் கெட்டவளென்றும் அவளுடைய நாக்கை அறுப்பதாகவும் இன்னும் பலவாறு கடுமையாகப் பேசியதாகவும் பல பாடல்கள் பாடுகிறார். நல்லவர்களைக் கெட்டவர்களாகவும். கெட்டவர்களை நல்லவர்களாகவும் மாற்றிப் பாடுகிறார் கம்பர்.

கடைசியாக மந்தரை கூற்றாக கம்பர் கூறுவன அழகாகவே உள்ளன. அவை வால்மீகி கூறாதவையே. அவை வருமாறு :—“இராமன் பட்டம் பெற்றவுடன் தேசமெல்லாம் உன்மாற்றவட்காம். நீ அவளுக்கு அடிமையாவாய் பின் உன் உறவினர் இங்குவந்து காண்பது உன் செல்வமோ உன் மாற்றவள் செல்வமோ? சீதையின் தந்தை சனகன் உன் தந்தைக்குப் பகைவன். இராமன் முடி சூடியவுடனே உன் தந்தையை அவன் கொன்றுவிடுவான். உன் தந்தைக்கு இன்னும் பல பகைவருளர். இவ்வூர்ச் சேனை சென்று உதவாது போனால் உன் தந்தையை அவர்கள் அழித்துவிடுவார்கள். இராமன் பெறும் அரசு அவன் பிள்ளைகளுக்கும் அவனை அடுத்துள்ள தம்பியாகிய இலக்குமணனுக்குமே போகும். ஆதலால் உன் மகனைக் கெடுத்தொழிந்தனை.” இதைக்கேட்டமாத்திரத்தில் கைகேசி மனம் மாறியதாகக் கம்பர் கூறுகிறார்.

மேலேகண்டதில் ஜனகனுக்கும் கேகயனுக்கும் பகை யென்றசெய்தியை வால்மீகி கூறவேயில்லை. இவையெல்லாம் கம்பர் கற்பனைகளே! பரதனை இராமன் கொன்றுவிடுவான் ஆகையால் நீயும் கெடுவாய் என்று பலமுறையும் வால்மீகி கூறிஇருக்க இதை ஓரிடத்தேனும் கம்பர் கூறினாரில்லை, வால்மீகி கூறும் இம் முக்கியமான செய்தியைக் கம்பர் மறைத்தார். நிற்க.

வால்மீகி கூறுகிறபடி ஓரிடத்திலும் கைகேசி கோபமுறாமைக்கு காரணமென்னை? அவள் வெளுத்ததெல்லாம் பாலென நினைப்பவள். சூதுவாது தெரியாதவள். அதனாலல்லவா தசரதன் செய்த சூழ்ச்சி கெடுதலாக உணராமலேயே காலந்தள்ளி வந்திருக்கிறாள். ஆனால் கைகேசி தன் கணவனைப்பற்றி இழித்துக் கூறியும் மந்தரையிடம் சினம் கொள்ளாதிருந்ததென்ன? என்றால் அவளுக்குக் கொஞ்சம் அரசில் ஆசையிருந்தது. அதனால அவளை சினம் கொள்ளவில்லை, மேலும் பரபுருஷகமனத்தால் பிள்ளை பெற்றவள்தானே. இராமன் அவளிடம் மிகவும் நல்லவனாக நடந்துகொண்டிருக்கிறபடியால் அவள் அவனைப்பற்றிய நல்லபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ளவும் முடியாமல் பலவாறு பேசிக் கடைசியாக பரதன் முடிசூடலுக்கு இசைகிறாள். தசரதனைப்பற்றி மந்தரை இழித்துக் கூறியவைகளை யெல்லாம் கம்பர் மறைத்தார். இனிமேற் செல்லுதும்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

மாட்டோம்” என்றும்சமஸ்கிருத பண்டிதர்கள்மறுக்கின்றார்கள். திருப்பதி உண்டிகையில் பணம் எல்லாரும் போடுகிறார்கள். அதிலிருந்து உபாத்தியாயர்களுக்கு சம்பளமும் கொடுக்கிறார்கள். எல்லாப் பையன்களுக்கும்படிப்புச் சொல்லிக்கொடுக்கவேண்டும். பாஷையிலுள்ள இலக்கணத்தையெல்லாருக்கும் சொல்லிக்கொடுக்கவேண்டும். இதை உண்டிகையை நிறைக்கும் பக்தர்கள் கவனிக்கிறார்களா? தேசீய வாதிகள்தான் கவனித்தார்களா? “இதெல்லாம் சுயராஜ்ஜியம் நமக்கில்லாததினால் உண்டாகின்றன. சுயராஜ்ஜியம் வந்தால் இதெல்லாம் சரியாய்விடும்” என்கிறார்களே. சுயராஜ்ஜியத்திற்கும் இலக்கணம் சொல்லிக்கொடுப்பதற்கும் என்ன சம்பந்தம்? இங்கிலீஷ் அரசாங்கம் “சில பையன்களைப்பள்ளியில்சேர்த்துசில பையன்களை சேர்த்துக்கொள்ளாதே, அப்படியே பாஷையிலுள்ள இலக்கணத்தை யெல்லாருக்கும் சொல்லிக்கொடுக்காதே” யென்று சொல்லுகிறதா? இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் “எல்லாரையும் சேர்த்துக் கொள்ளாதே, பாஷையிலுள்ள இலக்கணத்தை சிலருக்குச் சொல்லிக் கொடுக்காதே” என்றதடையைக் காணோம். அப்படி இருந்தால் இங்கிலீஷ் வித்வான்கள் நம் நாட்டில் இத்தனை பேர்கள் எப்படி உண்டாயிருப்பார்கள்? நம் தேசத்துப் பண்டிதர்களின் கல்வித்திறத்திற்கு மேற்பட்டிருக்கிறது. இந்தியாதேசத்துப் பண்டிதர் சுவாமி விவேகாநந்தருடைய கல்விதிறமை யென்று மேனாட்டுப் பண்டிதர்கள் சொன்ன புகழ்ச்சியின் பெருமையை நாம் எப்படி அனுபவிப்பது? இங்கிலீஷ் பண்டிதகவி சரோஜனி அம்மாளும், உலகமெலாம்பெயர்பெற்ற கவிதாகூரும் மேனாடுசென்று அவர்கள் பண்டிதத்திறமைக்கு மேனாட்டார் செய்யும் மரியாதையில் நாம் பங்குபெறுவது எப்படி? அதிசமர்த்தரான ராமானுஜமும், தியாகராஜனும், போசும், செங்கோட்டையனும் கணிதத்தில் வல்லவர்கள் என்கிற பேர்தான் எப்படிவரும்? கனம் சீனிவாசசாஸ்திரி அவருக்குவிதித்தபடி ஆல அரசமரத்தைச்சுற்றி அரிசியையும் குங்குமத்தையும் கூட்டிவந்தவர்கள் தலையில்போட்டு பிச்சை எடுக்கும் தொழிலைவிட்டு, தென்னாப்பிரிக்காவில் எல்லா நந்தவனமும் வெட்டும்படி செய்யும் அவ்வளவு ஆனந்தகரமாய் அமைக்கப்பெற்ற உத்தியானவனங்களிடையே அதிஅற்புதமானசித்திர வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டு ஆகாசத்தை அளாவிநிற்கும் மாளிகையில் விருந்துண்பது எப்படி? கனம் சீனிவாச அய்யங்கார்தான் சீமைக்குப்போய் எல்லா தேசமும் பார்த்து அதன் அமைப்பை நமக்குச் சொல்வதெப்படி? எந்ததேசத்திலாவது, எந்தமதத்திலாவது, எந்தபாஷையிலாவது, எந்தச்சட்டத்திலாவது, எந்த குருவினிடத்திலாவது, எந்தக்கடவுளிடமாவது, அவரவர்கள் பாஷையிலுள்ள இலக்கணங்களை அதைச் சேர்ந்தவர்களில் சிலர்போக மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்காதே யென்று சொன்னதுண்டா! நம்மதம், நம்கடவுள், நம்குருக்கள், நம்சாஸ்திரம், நம்சட்டங்கள்தானா நம் பாஷைகளிலுள்ள இலக்கணங்களை ஒருசிலருக்குத் தவிர மற்றவர்களுக்கு சொல்லிக்கொடுக்கப்படாதென்று சொல்லவேண்டும்? இதற்குக்காரணமென்ன?.


(இன்னும் வரும்)

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.




இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க் பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன?
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன. உண்மையாண கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தை பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நன்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான போன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.


ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

## வாஸன் புஸ்தகசாலை,

241, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி. டி. மதறாஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

**PHOTO HAND CAMERA**



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுநூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

**கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்**



ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி., மதராஸ்.



## சேலம் ஜவுளிகள்.

வேஷ்டிகள்.

அசல் 80-ம நெ. நூல் வேஷ்டிகள். பல வர்ணங்களில் நேர்த்தியான பார்டர் போட்டது கால் அங்குல அரை அங்குல பட்டுகரைகளில் அசல் வெள்ளி ஜரிகையினால் கொடி, இலை, பூ, காய்கள் சித்திரிக்கப்பட்டு உடுத்திக்கொள்ளுவதற்கு நாகரீகமாயிருக்கும். நீடித்து தாங்கக்கூடியது. 50 அங்குல அகலத்தில் எந்த நீளத்திலும் முழம் 1-க்கு ரூ. 1-12-0, 2-0-0, 2-8-0, 3-0-0.

நேரே உற்பத்தி செய்யுமிடம் இது ஒன்றே. புதுமாதிரி தினுசுகள் மிகவும் குறைந்தவிலைக்கு உத்திரவாதத்துடன் உங்கள் வீட்டுக்கே சேர்ப்பிக்கிறோம். தபால் செலவு இனாம். உடனே எழுதுங்கள்

சேலைகள்.

நேர்த்தியான ஜரிகைபார்டர் போட்ட பல வர்ண அசல் 60 நெ நூல் சேலைகள். தினந்தோறும் துவைத்துக் கட்டலாம். சாயத்திற்கு உத்திரவாதம். கனம் இல்லாத நூல் புடவை இதுஒன்றுதான். 42 அங்குல அகலம் 7 கஜ நீளம் விலை ரூ 14—0—0.

சேலம் ஷண்முகம் கம்பெனி லிமிடெட்.
மெயின் ரோட், சேலம். (தெ இந்தியா.)



## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.
இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.
விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.
எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)



## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.


தேவி ஆஸ்ரமம்.
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி



## முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

**110** சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபர்ஸ் 1 ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 12; அழகிய பலாக சேப்டி பின்கள் 24 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி

தபால் பெட்டி 119, மதராஸ்.


## அறிவிப்பு.

“குடி அரசு” வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்.

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

‘ரிவோல்ட்’ ‘ரிவோல்ட்’

## ‘REVOLT’

—)o(—

“குடி அரசி”ன் கொள்கையைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் ஒருமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.
ஆசிரியர்.- “குடி அரசு” & “ரிவோல்ட்,”
ஈரோடு.

# ஹிப்னடிசம், மெஸ்மெரிஸம்.

முதலிய அரிய அற்புதங்களைக் கற்கவேண்டுமானல்,
சுயமரியாதை பெற வேண்டுமானல்,



# ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

என்னும் மனோ வசிய ஜீவ வசிய நூலைப் படித்து
பயனடையுங்கள்.

## இதிலடங்கிய விஷயங்கள் :—

I முதற் பாகம் :—(11 பாடங்கள்)

முன்னுரை.

1 மானிட வசியம்
2 தன்னம்பிக்கைப் பயிற்சி
3 தன்னுட்சி
4 இருவகை மனம்
5 சுய மந்திரம்
6 மஹா ரகசியம்
7 பிராணுயாமம் (படங்களுடன்.)
8 வியாகூலமும், வீண் திகிலும்
9 அயர்ந்த நித்திரை
10 மன வோர்மை
11 முக்கிய குறிப்பு

II இரண்டாம் பாகம் :—(7-பாடங்கள்.)

1 டெலிபதி or மானஸ தந்தி
2 மானஸ தந்தியின் முதல் அப்பியாசம்
3 மானஸ தந்தியின் இரண்டாவது அப்பியாசம்
4 மானஸ தந்தியின் மூன்றுவது அப்பியாசம்
5 மானஸ தந்தியின் நான்காவது அப்பியாசம்
6 மானஸ தந்தியின் ஐந்தாவது அப்பியாசம்
7 பொதுக் குறிப்பு

III மூன்றும் பாகம் :—(12-பாடங்கள்.)

1 கோரிய பெண்ணை மணமுடிப்பது
2 மணமகன், மணமகளுடைய காதல் விருத்தி
3 ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெறுதல்
4 ஸ்திரீ புருஷனுடைய ஊடலை ஒழித்தல்
5 நண்பரின் இழந்த நேசத்தைப் பெறுதல்
6 பதமற்ற குழந்தையைப் பக்குவப் படுத்தல்
7 கல்யாணத்திற்கு ஏற்பாடான மணப்பெண்ணின் காதலைப் பெற
8 மகிழ்வில்லா மனத்தை மகிழ்வு பெறச் செய்தல்
9 உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல்
10 மேலதிகாரியின் விருப்பத்தைப் பெறுதல்
11 உலகத்தில் முதன்மைபெற
12 நட்பை உறுதிப்படுத்தல்

### அனுபந்தம்—1

மானிட வசிய ரஹஸ்யம்.

மானிட வசிய ரஹஸ்யத்தின் பீடிகை

மானிட வசியம், தன்னடக்கம் வியாதிகளை விலக்கிக் கொள்ளல் அப்பியாசம், மந்திரம்

### அனுபந்தம்—2

அற்புதானந்த ரஹஸ்யம்

அல்லது

சில அபூர்வ மர்மங்கள்

பிராணுயாமத்தால் வசீகர வசியம் பெறுவ தெப்படி?

இரகசிய முறையால் எளிதில் அரிய பொருள் சம்பாதிப்ப தெப்படி?

ஒரு சாதாரண யோக சாதனையால் எல்லா விருப்பங்களையும் பெற்றுக்கொள்வ தெப்படி?

எப்படிப்பட்டவர் கூட்டத்திலும் இணையில்லாக் கண்ணியம் பெறுவ தெப்படி?

நட்சத்திர உதவியால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெற்று எல்லாவித இடையூறுகளையும் தாண்டிக்கொண்டு அப்பாற் சென்று அளவிறந்த வெற்றி பெறுவதெப்படி?

முதிர்ந்த வயதிலும் வாலிபதசையை வளர்ப்ப தெப்படி?

கண் பார்வையையும், கறு ரோமத்தையும், வெண் தந்தங்களையும் காப்பாற்றிக் கொள்வ தெப்படி?

பிராணுயாமம் முதலியவற்றால் பூரணச் சுகத்தை நிலைப்படுத்திக் கொள்வ தெப்படி?

இருவித ஆன்மப் பயற்சியால் எல்லா நோய்களையும் கண்டிப்ப தெப்படி?

பிளேக், விஷ ஜுரம் ஆகியவற்றைத் தடுத்துக் கொள்வ தெப்படி?

வைசூரியும், வாந்தி பேதியும் வாராமல் தடுப்ப தெப்படி?

மரணம் வருமுன் அதை அறிந்து கொள்வ தெப்படி?

மரண காலத்தில் செய்யப்படும் ஒருவகைக் கிரியையால் மரணத்துக்குப் பின் மகா மேலான உன்னத ஸ்தானத்தைத் பெறுவ தெப்படி?

சாதாரணப் பிராணுயாமத்தால் உங்களுடைய பகைவரை நண்பராகச் செய்து கொள்வ தெப்படி?

மனோ சக்தியை அபிவிருத்தி செய்து கொள்வ தெப்படி?

ஜியூஜிட்ஸு முறைப்படி மரித்தோரை எழுப்புவ தெப்படி?

நாகப் பாம்பின் விஷத்தைப் போக்குவ தெப்படி?

வில்வ வேரின் விநோதங்களென்ன?

புளி யேப்பத்தைத் தடுப்ப தெப்படி?

துளசியின் மகிமை என்ன?

நாயுருவியின் அதிசயம் யாது?

லவணத்தின் மகிமை என்ன?

இத்துடன் பல விநோத விடுகதைப் படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

மேல் நாட்டில் 12 பவுன் (ரூ. 80) விலை மதிப்பிடக் கூடிய இப் புத்தகத்தை நம் ஏழை நாடாகிய இத்தமிழ் நாட்டின் கண் விலை ரூ. 3-க்கே விற்க துணிகின்றோம்.

புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு மூன்று ரூபாய் மதிப்பிடுவார்கள். என்பது நிச்சயம்.

உடனே உங்களுக்கோர் ஐசுவரியம் போன்ற இப்புத்தகத்தை வரவழையுங்கள்.

இதன் விலை ரூ. 3—0—0, தான் வி.பி. வேறு.

எல்லா புத்தக ஷாப்பிலும்
கிடைக்கும்

ஒரே முறையில் 2 பிரதி வாங்குவோர்க்கு
தபால் சார்ஜ் இனம்

**மனோஹராய் கம்பெனி,** தபால்பெட்டி 248, சென்னை.


ஸ்ரீமதி யு. கமலாமாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.